உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-சகூ.] விஜய-ஸு வைகாசி—ஆனி-மீ [பகுதி. எ-அ.

Vol. 49. May—July 1953 No. 7-8.

இராமாவதாரத் தனிச்செய்யுள் உரை

திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B.A., B.L. மதுரை.

அயோத்தியாகாண்டம்: கைகேசி சூழ்வினைப்படலம் 108.

இப்பொழு தெம்ம னோரா லியம்புதற் கெளிதே யாரும்
செப்பரும் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா

இதன்பொருள்:—எத்தகையோரும் எடுத்துரைக்க அரிய குணங்கள் அமைந்த இராமனுடைய தெய்வத் திருமுகத்தின் சிறப்பை உற்றுநோக்கினால் இப்பொழுது அதன் தன்மை சொல்லு தற்கு எளியதன்று. இதற்கு முன்னும் பின்னும் இராமன் பல வெற்றிச்செயல்கள் விளைத்துள்ளான். ஆனால் அப்பொழுதெல்லாம், அவன் முகம் புதிதாய் மலர்ந்த தாமரைக்கு ஒப்பாயிருந்தது; இப்பொழுதோ என்றால், புதிதாய் மலர்ந்த தாமரையை வென்று விட்டது; என்பதாம்.

இதன்கருத்து:—இராமன் திருமுகம் எல்லாக்காலத்திலும் செந்தாமரை மலரோடு இணையொத்து விளங்கும்; வில்லிறுத்தது, சீதையை மணந்தது, குகன் சுக்கிரீவன் இவர்களோடு நட்புக் கொண்டது, விபீடணனுக்குச் சரணமளித்தது என்பனபோன்ற

சில சமயங்களில் அவன் முகம் அப்பொழுது அலர்ந்த செந்தாமரையோடு அழகு ஒத்து விளங்கும்; ஆனால் இப்பொழுதோ என்றால் அத்திருமுகச்செவ்வி அந்த நிலைமையையும் வென்று விளங்கிற்று; என்பதாம்.

இராமன்முகம் எப்பொழுதும், செந்தாமரையை ஒத்திருப்பது முதற்படி; அப்பொழுது அலர்ந்த செந்தாமரையை ஒத்திருப்பது இரண்டாவதுபடி; அப்பொழுது அலர்ந்த செந்தாமரையையும் வென்று விளங்குவது மூன்றாவதுபடி. இங்ஙனமாக அவன் முகத்தின் மூவகை நிலைகள் வேறுவேறாக உணர்ந்துகொள்ளற்பாலன.

முன்பு பின்பு ஒப்பதே என்றதனால், இதைத்தவிர, இராமன் பரமஸந்தோஷமடைந்த மற்றக்காலங்கள் எல்லாவற்றிலுங்கூட, இப்பொழுதுபோல் எப்பொழுதுமே, அவன் திருமுகமண்டலம் இவ்வளவு உயர்ந்த பொலிவை அடைந்ததில்லை என்பதாம். இதனால் இந்த ஒரேசமயத்தில்தான் இத்தகையை அசாதாரணமான பொலிவு, இராமன் திருமுகத்துக்கு உண்டாயிற்று என்று முடிவாகிறது.

இதன் நிறம் ஆராயற்பாலது. இராமன் முடிசூட இணங்கியது "தெருளுடை மனத்து மன்னன் ஏவலில் திறம்ப அஞ்சி, இருளுடை உலகந் தாங்கும் இன்னலுக்கு இயைந்து" நின்றதேயாகும் இராவணாதி அரக்கர்கள், இந்திரன் முதலிய இமையோர்க்கும் முனிவர் முதலிய மனிதர்க்கும் இழைத்துவந்த துன்பங்கள், உலகங்களைப்பற்றி நின்ற இருள். இவ்வாறு மன்னுயிர்களுக்கு வரும் இன்னல்கள் எல்லாம் மன்னனான இராமனுக்குவரும் இன்னல்களே.

"செயிரிலா வுலகினில் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பு மாயினான்"

(அரசியல் 10.)

என்னும் பாடல் நோக்கத்தக்கது.

தன் அரசியலில் தனக்கு இந்த இன்னல் இல்லாமற் காத்துக்கொள்வதற்கு, இராவணாதி அரக்கராகிய இருளை ஒழிக்கவேண்டும். தாடகை சுபாகு இவர்களை வதைத்து, இதற்கு ஆரம்பம் செய்தாயிற்று. இதைத் தொடர்ந்து முடித்து நிறைவேற்றுவதற்கு

இராமன் அப்போது முடிசூட்டிக்கொள்வது இடைஞ்சலாயிருந்தது. ஆகையால் அதைத் தவிர்ந்து செல்ல விரைந்து நிற்கும் இராமனுக்கு, அவனை நாடுதுறந்து காடேகுமாறு கட்டளையிட்ட கைகேசியின் உபகாரத்துக்கு எதிராக, இத்தகைய மகிழ்ச்சிதரும் செயல் வேறு எதுவுமே, அவன் ஆயுள் முழுமையும் நேரவில்லை என்பது இதனால் நன்குவிளங்கும்.

இக் கைகேசி சூழ்வினைப்படலம் 51-ம் பாட்டு, விடியற்காலையில் பேரிகை ஒலித்ததை வருணிக்கின்றது. அது, ஆசையாகிய வெளிச்சத்தில் வந்த இரவு, நேற்றோடு கழிந்தது என்று ஒலித்ததாம். இதன்கருத்து:—இன்று இராமன் நமக்கு அரசன்; ஆதலின் இனி வரும் இரவுகளுங்கூட நாம் ஆசையோடு இராமசேவை செய்யும் பகல்களே ஆவன; நேற்றுவரை நாம் உலகப்பொருள்களைத் தேடி அடையப் பாடுபட்ட பகல்களுங்கூட இரவுகளே ஆம்; அவைகளெல்லாம் நேற்று இரவோடு கழிந்தன; இனி நாம் நித்தியமான பகலில் வாழப்போகிறோம்; என்பதாம். இந்தப் பகல்வாழ்க்கையில் அரக்கர் செய்யும் இன்னல்கள் இருப்பது, முற்றிலும் ஒழித்துத்தீரவேண்டிய இருட்டல்லவா? இந்தப் பேரிகையின் கற்பனையேதான் இராமனுடைய சிந்தனையும் எனக்கொள்ளற்பாலது.

மேலும் விராதன்,

"துறப்பதே தொழிலாகத் தோன்றினோர் தோன்றியக்கால்
மறப்பரோ தம்மையது வன்றாகில் மற்றவர்போல்
பிறப்பரோ எவர்க்குந்தாம் பெற்றபதம் பெறலரிதோ
இறப்பதே பிறப்பதே எனும்விளையாட் டினிதுகந்தோய்

(விராதன் வதை 51)

என்கிறான். இதில் இராமாவதார ரஹஸ்யம் கூறப்பெற்றுள்ளது. அது, முடிதுறந்து கான்புகுந்து, முனிவர்களுக்கு அபயம் கொடுத்து, அரக்கரை அழித்தொழித்து, பிறகு தசரதனுக்கு மூத்தமைந்தனாகப் பிறந்ததால் இராமன் தனக்கு உரிமையாகப் பெற்ற கோசலராஜ்யாதிபத்ய பதவியை அடைதல்; என்பது. இவைகளை எல்லாம் இந்த வரிசையில் ஆற்றுவதற்கு, கைகேசியின் ஆஜ்ஞை உதவிய சந்தோஷம் அளவிடல் அரியது.

இன்னும், பிணிவீட்டுபடலம் 81-ம் பாடலில், இராமாவதார தத்துவத்தை அனுமன் இராவணனுக்கு எடுத்துச்சொல்லுகின்றான்.

“அறந்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந் துலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத் தேக விண்டு
பிறந்தனன் தன்பொற் பாதம் ஏத்துவார் பிறப்ப றுப்பான்

இப்பாட்டால், தீயோரைக் கொன்று அழிப்பதன் மூலமே தக்கோர் இடர் தொலையும் என்பதும்; அதன் பின்னரே அத் தக்கோரும் செந்நெறிச் செல்ல முடியும் என்பதும்; அவர் செந்நெறிச்செல்லத் தொடங்கியதையிட்டே உலகத்தோர் நீதித்திறன் தெரிந்து அதனைப் பூண்டு ஒழுகுவர் என்பதும், அந்த நீதித்திறம் உலகத்தோர் நன்மைக்கென்றே அருள்மிகுந்து வேதம் மொழிந்தது என்பதும்; இந்தநிலை எல்லோரிடத்தும் எய்திய காலத்து அறம் தலை நிறுத்தப்படுகிறது என்பதும் தெளிவாயிற்று. இதுவே அவதாரத்தின் நோக்கம்.

தீயோர் இறந்துக நூறுதல் எதற்கெனின்; தீயோர் உள்ள வரை, அவர் வலியராக இருக்கும் வரை, தக்கோரும் அவர் துன்பஞ்செய்வதற்கு அஞ்சி அவருக்கே ஆட்செய்வர். இதை, “தலைபத்துள்ளாற்கு ஆட்செய்கின்றார்கள் அல்லால் அறஞ்செய்கின்றார்கள் யாரே” என்பதனால் அறியலாம். இதுபோலவே இராமாவதாரத்தில் இன்னும் பல இடங்கள் எடுத்துக்காட்ட உள்ளன.

இங்ஙனமாகிய அவதாரநோக்கம் நன்கு நிறைவேறத் துணை புரியக்கூடியதாக முதல் முதல் வாய்த்த அரிய சந்தர்ப்பம், கைகேசி இராமனைக் காட்டிற்குப் போகச் சொன்னதேயாகும். ஆகையால் இச்சமயம் அவனுக்கு ஏற்பட்ட சந்தோஷம் போல, வேறு எச்சமயத்திலும் உண்டாகவில்லை என்பதை, கற்றோர்கள் கண்டு உணாற்பாலர். ஆதலின் இராமன்முகம் “அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றது”. அம்மா! என்றது ஆச்சரியக்குறிப்பு.

இந்த மஹாகவி கம்பருக்கு, இராமனுடைய இத்தகைய முகத்தோற்றம் வியப்பைத் தந்தது; அவருடைய இராமாவதாரத்தைக் கற்பவர்க்கு, இந்தப் பாடலே மிகவும் வியப்பைத் தருகின்றது.

சங்ககால மன்னர்கள்

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரியவர்கள், M. A. விரிவுரையாளர்
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(124-ம் பக்கத் தொடர்ச்சி)

பிற சேரமன்னர்கள்

இதுவரை நம் வரிசையில் அகப்படாத சேரமன்னர்கள் சேரமான் எந்தை, சேரமான் இளங்குட்டுவன், சேரமான் வஞ்சன், சேரமான் முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன், கணைக்காலிரும்பொறை, சேரமான் கருவூரேறிய ஒள்வாள்கோப்பெருஞ்சேர லிரும்பொறை யாவர். சேரமான் எந்தை, சேரமான் இளங்குட்டுவன், சேரமான் முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன் ஆகியவர்கள் சிறந்த புலவர்கள். இவர்கள் பாடல்கள் பெண்மையின் சிறப்பினை விளக்குந்திறம் படித்து இன்புறற்குரியது (குறு 22, அகம் 30, 153). சேரமான் வஞ்சன், திருத்தாமன் என்னும் புலவரால் போற்றப்பட்டிருக்கிறான் (புறம் 398). அச்செய்யுளால் அவன் வீரமும் ஈகையும் புலப்படுகின்றன.

கணைக்காலிரும்பொறை, சோழன் கோச்செங்கணுனெடு பொருது, அச்சோழ மன்னனால் சிறைப்படுத்தப்பட்டவன். இம் மன்னனது காலத்தைத் துணிய இயலவில்லை. கணைக்காலிரும் பொறையை வேறு எப்புலவரும் குறிக்கவில்லை. செங்கண்ணன் எனப் பெயரிய புலவர் ஒருவர் காணப்படுகிறார். அப்புலவர் இக் கோச்செங்கண்ணனாகலாம். இச்சேரலைச் சிறையினின்றும் விடுவிக்கப் பொய்கையார் என்னும் புலவர் செங்கணானைச் சிறப்பித்துக் களவழிநாற்பது பாடினார் எனக் கூறப்படும் வழக்குண்மையால் பொய்கையார் என்னும் புலவரால் புகழப்பட்ட சேரமான், கோதையின் காலத்தோ, அவனையடுத்தோ வாழ்ந்தவனாதல் வேண்டும்.

சேரமான் கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரலிரும்பொறை என்பான், "கருவூர் ஏறிய" என்னும் அடைமொழியிருப்பதனால் கருவூரைத் தலைநகராகக்கொண்ட சேரமன்னர்களுள் முதல்வன் ஆதல் வேண்டும் எனப் பலர் கருதுகின்றனர். இவனைப் பாடிய புலவர் நரிவெரூஉத்தலையார் ஒருவரே. ஆதலின் இவனது காலத்தைத் துணிதற்கில்லை. 'கோப்பெருஞ்சேரலிரும்பொறை' எனக் குறிக்கப்படுவதால் தகடூர் எறிந்தவனுவனோ? எனின், அவ

னுக்குக் கருவூர் எங்ஙனம் உரிமையாகியது என்பது புலப்படவில்லை. அவன் காலத்து மன்னனுகிய கடலோட்டிய வேல்கெழு குட்டுவனும் அவன் தந்தையாகிய நெடுஞ்சேரலாதனும் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டிருந்தனர். வஞ்சியே கருவூர் என்பது குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன் கருவூர் எறிந்தானைக் கோவூர்கிழார் பாடிய செய்யுளாலும் அதன் அடிக்குறிப்பாலும் விளங்கும் (புறம் 373). நக்கீரர் சேரமான்கோதைக் குரியது கருவூர் எனக் குறிக்கின்றார். அந்நகர் தண்ணான்பொருநைக் கண்ணது என அவரே குறிக்கின்றார் (அகம் 93). ஆதலின் வஞ்சியே கருவூர் எனக் குறிக்கப்பட்டதென்பதில் ஐயமில்லை. இக் கோப்பெருஞ்சேரலிரும்பொறையே ஆட்டனத்தியாவன் எனக் குறிப்பவரும் உளர். ஆட்டனத்தியை உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியின் மகனாகிய கரிகால்காணப் புனலாடியபோது காவிரியாறு வவ்விற்று எனக் கூறப்படுவதால் ஆட்டனத்தி, குட்டுவன் காலத்தவனாதல்வேண்டும். ஆதலின் ஒள்வாள் கோப்பெருஞ்சேரலிரும்பொறை சங்கஇலக்கியங்களில் காணப்படுகின்ற சேரமன்னர்களுக்கெல்லாம் முன்னவனாவான்.

ஆட்டனத்தி அரசகுமாரன் ஆகான். இதற்குரிய காரணத்தைப் பரணர் என்னும் நூலில், திரு. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்கள் கூறியிருக்கின்றனர்.

இதுவரை கண்ட முடிபின்படி சேரவேந்தர்களின் வரிசைக்கிரமம் பின்வருமாறு:—

உதியன்சேரலாதன் — அந்துவன்சேரலிரும்பொறை

குடக்கோநெடுஞ்சேரலாதன் — செல்வக்கடுங்கோ — { பல்யானைச்செல்கெழுகுட்டுவன்

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் — { ஆடுகோட்பாட்டுச்சேரலாதன்

பெருஞ்சேரலிரும்பொறை

கடலோட்டிய வேல்கெழு குட்டுவன்

இளஞ்சேரலிரும்பொறை — { யானைக்கட்சேய் மாந்தரன்சேரலிரும்பொறை

சேரமான்மாரிவெண்கோ

கோதை

சோழமன்னர்கள்

முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி, வேற்பஃறடக்கைப்பெருவிறற்கிள்ளி, கரிகாற்பெருவளத்தான், உருவப்பஃறேர்இளஞ்சேட்சென்னி, கரிகாலன், செம்பியன், இராஜசூயம்வேட்டபெருநற்கிள்ளி, கிள்ளிவளவன், நலங்கிள்ளி, திருமாவளவன், செங்கணான் ஆகியவர்கள் முன்னர்க் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களேயன்றி வேறுசில சோழமன்னர்களும் காணப்படுகின்றார்கள். அவர்கள் சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளி, நல்லுருத்திரன், கோப்பெருஞ்சோழன் ஆவர்.

சோழன் நல்லுருத்திரன் சிறந்த புலவன். பொருள்மொழிக் காஞ்சித் துறையில், "வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ டியைந்த கேண்மை இல்லா கியரோ" (புறம் 190) எனக் கூறுவது, அவனது ஊக்கத்தின் சிறப்பையும் நட்பின் பெருமையையும் உணர்த்தும். முல்லைக்கலி பாடிய நல்லுருத்திரனார் என்பாரும் இச்சோழனே யாகலாம்.

கோப்பெருஞ்சோழனும் சிறந்தபுலவன் (புறம் 214—216, குறுந். 20, 53, 129, 147). இக்கோப்பெருஞ்சோழனைப்பாடிய புலவர்கள், கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப்பூதநாதனார், புல்லாற்றூர் எயிற்றியனார், பொத்தியார், பிசிராந்தையார். இப்புலவர்களுள் பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடைநம்பியையும் பாடியுள்ளார் (புறம். 184). கோப்பெருஞ்சோழனைவென்ற இளஞ்சேரலிரும்பொறையால் வெல்லப்பட்டவன் சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியாகும். ஆதலின், சென்னியும் அறிவுடைநம்பியும் வாழ்ந்தகாலமே கோப்பெருஞ்சோழன் காலமாகும்.

சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளி, சாத்தந்தையார் நக்கண்ணையார் ஆகிய இருபுலவர்களாலும் பாடப்பட்டவன்; (புறம் 80-85) முக்காவனாட்டு ஆமூர்மல்லனைப்பொருது அட்டு நின்றான். அவ்வீரச்செயலைக் கண்ட நக்கண்ணையார் என்னும் பெண்புலவர் அம்மன்னன்மீது காதல்கொண்டு, கைக்கிளைத்திணையில் மூன்று பாடல்கள் பாடியுள்ளார். இவனுக்கு உறந்தை உரியது (புறம் 395). ஆய், நள்ளி, நன்னன் ஆகியவர்கள் இவன் காலத்தவராகவோ இவனுக் கண்மையான காலத்தவராகவோ ஆதல்வேண்டும் (அகம் 152). மத்தியென்பானும் இவன் காலத்தவன். ஆய்அண்டிரன்

காலத்தவனாதலின், அண்டிரனைப்பாடிய முடமோசியாரால் குறிக்கப்பட்ட முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளியே இப்பெருநற்கிள்ளியாதல் வேண்டும்.

இதுவரை ஆய்ந்து கண்ட முடிபின்படி சோழ வேந்தர்களின் வரிசைக்கிரமம் பின்வருமாறு:—

முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி
கரிகால்வள்வன் I
செம்பியன்
வேற்பஃறடக்கைப்பெருவிறற்கிள்ளி
உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி கோப்பெருஞ்சோழன்
கரிகாலன் II
இராஜசூயம்வேட்டபெருநற்கிள்ளி
கிள்ளிவளவன்
நலங்கிள்ளிசேட்சென்னி
திருமாவளவன்

பாண்டியமன்னர்கள்

உக்கிரப் பெருவழுதி, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், கூடகாரத்துத்துஞ்சிய மாறன்வழுதி, இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி ஆகியவர்கள், முன்னர்க் குறிக்கப்பட்டுள்ளனர். ஆங்குக் குறிக்கப்படாத பாண்டியர்கள் பாண்டியன் பன்னாடுதந்தான், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, நிலந்தரு திருவிற்பாண்டியன், பூதப்பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சித்திர மாடத்துத்துஞ்சிய நன்மாறன், பாண்டியன் அறிவுடைநம்பி, பாண்டியன் கீரன்சாத்தன், நல்வழுதியார், அண்டர்மகன்குறுவழுதி, இளம்பெருவழுதி, பாண்டியன் மாறன்வழுதி, பெருவழுதி, கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதி, முடத்திருமாறன் ஆகியவர் ஆவர்.

நிலந்தருதிருவிற்பாண்டியன், பன்னாடுதந்தான், முடத்திருமாறன் ஆகியவர்கள் ஒருவராகவே ஆதல் வேண்டும் என்பது பல்லோர் துணிபு. பாண்டியன் முடத்திருமாறன், இடைச்சங்கத்திறுதி

யில் வாழ்ந்திருந்து கடல்கோளுக்குப் பிறகு கடைச்சங்கத்தை நிறுவியவன். பாண்டியன் பன்னாடுதந்தான் சிறந்த புலவன். இவன் பாடிய செய்யுளில் இவனது செம்மலுள்ளம் குறிக்கப்படுகிறது.

பூதப்பாண்டியன் சிறந்த புலவன். இவன் காலத்துத் திதியன் என்பானுக்கு உரியதாக விளங்கியது பொதியில் என்பது, இவன் பாடிய செய்யுளால் புலனாகிறது (அகம் 25). இவன் பாடிய வஞ்சினக் காஞ்சி (புறம் 71) படித்து இன்புறுதற்குரியது; கருத்தில் நன்கு அமைத்துக்கொள்ளற்குரியது. இவனுக்கு நண்பர்கள் மாவன், ஆந்தை, அந்துவன், சாத்தன், ஆதனழிசியாவர் (புறம் 71). இவன் பெருங்கோப்பெண்டின் கற்புத்திறத்தினை வியக்கின்றார் போராலவாயார் (புறம் 247). இப்பாண்டியனது காலம் திதியன் வாழ்ந்த காலம்.

ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் ஓர் புலவன். இவன் பாடிய செய்யுள், இவன் கல்வி வளர்ச்சியில் கொண்டிருந்த முயற்சியை நன்குணர்த்தும். இவன் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன் காலத்தவன் என்பர். இவ்வாறு கூறுதற்குச் சிலப்பதிகார மதுரைக் காண்டக் கட்டுரைதவிர வேறு சான்றில்லை.

சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறன், ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியனுக்குப் பிற்கு பட்டமெய்தியவன் என்பர். இவ்வாறு கூறுதற்குக் காரணம் சீத்தலைச்சாத்தனார் இம்மன்னனைப் பாடியிருப்பதேயாம். இளங்கோவடிகளும் சாத்தனாரும் சமகாலத்தவர் என்னும் கொள்கையே இவ்வாறு கூறுதற்குக் காரணம். சாத்தனார் மணிமேகலையைப் பாடிமுடித்த பிறகே இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றினார். இளங்கோவடிகள் செங்குட்டுவனுக்கு உடன்பிறந்தார் ஆவர். ஆதலின் நன்மாறன் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியனுக்குப் பின்னவன் ஆவான் எனக் கூறுகின்றனர். கடலோட்டிய வேல்கெழுகுட்டுவனும், செங்குட்டுவனும் ஒருவரெனத் துணிதற்கில்லை. பதிற்றுப்பத்துப் பதிகங்கள் நெடுஞ்சேரலாதனுக்கு மக்கள் மூவர் எனக் குறிக்கவும் சிலப்பதிகாரம் நெடுஞ்சேரலாதன் மக்கள் இருவரென்றும், அவர்கள் செங்குட்டுவனும் இளங்கோவடிகளுமாவர் எனவும் கூறுகிறது. இளங்கோவடிகளும்

சாத்தனாரும் சமகாலத்தவர் என்பதற்கு இவ்விரண்டு காப்பியங்களைத் தவிர, வேறு சான்றில்லை. இதுபற்றிய பிறகொள்கைகள் இறுதியில் தரப்படும்.

பாண்டியன் அறிவுடைநம்பி பிசிராந்தையாரால் பாடப்பட்டவன் ஆதலின், கோப்பெருஞ்சோழன் காலத்தவன். உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியும் இக்காலத்தவனாவன். இம் மன்னன் சிறந்த புலவன். குடிகளிடத்து வரிவாங்கும் கொள்கைபற்றி இவனுக்குப் பிசிராந்தையார் செவியறிவுறுப்பது எக்காலத்து மன்னர்க்கும் ஏற்ற நெறியாம். இவன் புதல்வர்ப்பேற்றின் பெருமையை எடுத்துரைக்குந்திறன் இவனது இல்லற வாழ்க்கையின் சிறப்பை யுணர்த்தும்.

பாண்டியன் கீரன்சாத்தன் சிறந்த கொடையாளி; இவனது புகழ்பாடிய ஆவூர் மூலங்கிழார் பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியிருக்கின்றார்; ஆதலின், அம்மன்னன் காலத்தவனாதல் வேண்டும். இச்சாத்தன் அம்மன்னனுக்குப் படைத் தலைவனாக ஆதல்வேண்டும். பாண்டியர்களுள் கீரன்சாத்தன் என்று பெயரிடும் வழக்கம் உண்டென்பது புலப்படவில்லை.

நல்வழுதியார், பரிபாடலுள் 12-ஆம் பாடல் பாடியவர். இலக்கியங்களில் காணப்படும் வழுதியர்களுள் யாவன் என்பது புலப்படவில்லை. அண்டர்மகன் குறுவழுதியார் அகம் 150, 228, குறுந்தொகை 345, புறம் 346 ஆகிய நான்கு பாடல்களைப் பாடியுள்ளார். இவரது பாடலால் பெண்ணின் பெருமையும் பெண்களை வளர்த்தலின் அருமையும் புலப்படும். இவரது காலத்தை அறிவிக்கும் கருவிகளில்லை. பாண்டியன் மாறன் வழுதி நற்றிணை 97, 301ஆம் பாடல்களைப் பாடியவர். இம்மன்னன் கூடகாரத்துத்துஞ்சியமாறன் வழுதியாகலாம்.

பெருவழுதி நற்றிணை 55, 56ம் பாடல்களைப் பாடியவர். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதி கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி ஆகியவர்களுள் யாவன் என்பது அறிய இயலவில்லை. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, நெடும்பல்லியத்தனார், நெட்டிமையார் ஆகியவர்களால் புகழ்ந்து பாடப்பட்டவன் (புறம் 9, 12, 15

64). காரிகிழார் என்னும் புலவர் இவனுக்கு ஆட்சிமுறையைச் செவியறிவுறுக்கின்றார் (புறம் 6). இவன் இடைச்சங்ககாலத்தவன் என்ப. இரும்பிடர்த்தலையார், கருங்கையொள்வாள் பெரும்பெயர் வழுதியைச் செவியறிவுறுத்தி வாழ்த்தியிருக்கின்றார் (புறம் 3). இரும்பிடர்த்தலையார் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மகனாகிய கரிகாலனுக்கு அம்மான் என்பர். இதற்குத்தக்க சான்று இல்லை. எனினும் வழக்குநோக்கின், கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் காலத்தவனாதல் வேண்டும். எனவே இவ்வழுதி, உக்கிரப்பெருவழுதியாகவோ அல்லது அவனுக்கு முற்பட்டவனாகவோ ஆதல்வேண்டும். கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி திருமாலிருஞ்சோலைமலையைப் (பரி 10) புகழ்ந்து பாடியுள்ளார். இவர் பாடிய "உண்டாலம்ம" என்று தொடங்கும் பாட்டு ஒவ்வொருவரும் உள்ளத்துள் இருத்தவேண்டிய தொன்றும். வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவதி காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனால் பாடப்பெற்றவன். குராப்பள்ளித்துஞ்சிய திருமாவளவனும், பிட்டங்கொற்றனும், சேரமான்கோதையும் இவன் காலத்தவர்கள்.

காலம்

இம் மன்னர்களது காலத்தை வரையறுத்துக் கூறுவதில் பல இடையூறுகள் உள்ளன; எனினும் மேற்கூறிய வரிசைமுறைப்படி காலத்தை வரையறுத்துக் காண்போம். கபிலர் ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழறிவுறுத்தக் குறிஞ்சிப் பாட்டைப் பாடினர். மௌரிய மரபினன் ஒருவன் பிரகத்தன் என்னும் பெயரொடு குறிக்கப்படுகின்றான். பரணர், மாமூலர் முதலிய புலவர்களும் மோரியரைக் குறிப்பிடுகின்றனர். ஆதலின், கபிலரால் தமிழறிவு பெற்ற ஆரியமன்னன் மௌரியனே யாதல் வேண்டும். மௌரிய மரபு இப் பிரகத்தனொடு முடிவடைகிறது. இம்மன்னன் புஷ்ய மித்திரன் என்பவரால் கி. மு. 184 கொல்லப்பட்டான் என்பர் வரலாற்றாசிரியர்கள். ஆதலின் கபிலரால் பாடப்பெற்ற செல்வக் கடுங்கோவினது காலமும் கி. மு. 184ஐ அண்மியதாக இருத்தல் வேண்டும். ஆய் அண்டிரான் காலம் அதற்குச்சற்று முந்தியதாதல் வேண்டும். ஆதலின் கபிலரது காலத்தைக் கி. மு. 200 கி. மு.

160 என்று கொள்வது பொருந்தும். கபிலரை ஆதரித்த பாரி கி. மு. 200ஐ அடுத்த காலத்தவராவர். பரணரால் பாடப்பெற்ற குடக்கோ நெடுஞ்சேரலாதனும் மாந்தரம் பொறையன் கடுங்கோவும் இக்காலத்தவர். பெருஞ்சேரலாதனைவென்ற கரிகால்வளவனும் பெரும்பூண்சென்னியும் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் இக்காலத்தவராவர். செல்வக்கடுங்கோவின் தந்தை அந்துவன்சேர லிரும்பொறையும் சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளியும் ஆய் அண்டிரன் காலத்தவராதலின் கி. மு. 200க்குச் சற்று முந்தியவர்களாவர்.

உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார் அந்துவன்சேர லிரும்பொறையைப் பாடியுள்ளார். மோசிகீரனார் என்னும் புலவர் பெருஞ்சேர லிரும்பொறையைப் பாடியுள்ளார். மோசிகீரனார், பெயரடையை நோக்கின், முடமோசியாருக்கு மகனாகலாம் என நினைத்தற் கிடனுண்டு. ஆதலின் செல்வக்கடுங்கோவின் மகனாகிய பெருஞ்சேரலிரும்பொறை மேற்குறித்த காலத்தை அடுத்து வாழ்ந்தவராதல் வேண்டும். அதாவது சற்றேறக்குறைய கி. மு. 150முதல் கி. மு 130ஆகும். செல்வக்கடுங்கோவிற்கும் பெருஞ்சேரலிரும்பொறைக்கும் இடைப்பட்டவன் நார்முடிச்சேரல்.

பல்யானைச்செல்கெழுகுட்டுவனும் அவனுக்குப் பகையாக விளங்கின செம்பியனும் கி.மு. 200 கி. மு. 175 வரை வாழ்ந்தவராதல் வேண்டும். செம்பியன் இதற்குப் பின்னும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது ஆட்சித்தொடக்கம் வரை, கி.மு. 150வரை வாழ்ந்திருந்தனன். வேற்பஃறடக்கைப்பெருவிறற் கிள்ளியும் 150வரை வாழ்ந்தவனாவன். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் கி. மு. 175-கி. மு. 150 வரை வாழ்ந்தவனாவான். பரணராலும் பெருங்குன்றூர் கிழாராலும் பாடப்பெற்ற உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியும் இக்காலத்தவனாவன்; கி.மு. 150க்குச் சிறிது பின்பும் வாழ்ந்தவனாதல் வேண்டும். இளஞ்சேட்சென்னியின் மகனாகிய கரிகாலன் II சென்னிக்குப் பிற்பட்டவன் கி. மு. 140—120 எனலாம். இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி இவனுக்குப் பிற்பட்டவனாவன்; கி. மு. 120. கி. மு. 100 ஆகலாம்.

குடக்கோநெடுஞ்சேரலாதனும் குட்டுவனும் நீண்ட நாள் அர சாண்டவர் எனப்படுதலின், குடக்கோநெடுஞ்சேரலாதன் காலம் கி.மு.200 கி.மு.150 எனவும் குட்டுவனது காலம் கி.மு. 150 கி.மு. 100 எனவும் கொள்ளலாம். குட்டுவனது ஆட்சிக்காலத்து இடைப் பகுதியில் அரசெய்திய தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ் செழியன் காலம் கி. மு. 125—கி. மு. 100 எனக் கொள்ளலாம். குட்டுவனது ஆட்சியின் இறுதிக்காலத்து அரசொடு வீற்றிருந்த சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனாவன். குட்டுவனை (வானவனை) வென்றனன் கிள்ளிவளவன். குட்டுவனுக்குப்பின் அர செய்திய சேரமன்னன் கோதையாவன். இவன் காலம் கி. மு. 100-கி. மு. 75. இவன் காலத்துச்சோழமன்னன் கிள்ளிவளவன். நலங்கிள்ளி இவனுக்குப் பிறகு அரசெய்தியவன். இவ்விரு சோழ மன்னர்கள் காலம் கி. மு. 100-கி. மு. 50 ஆகலாம். இவர்களுக்குப் பிறகு குராப்பள்ளித்துஞ்சிய திருமாவளவன் அரசாண்டனன். இத்திருமாவளவன் காலம் கி. மு. 50-கி. மு. 10 ஆதல் வேண்டும். இத்திருமாவளவனே வடநாடுசென்று வென்றிகண்ட வளவனாவன். சான்று பின்வருமாறு:—

கி. மு. 327–கி. மு. 232க்குட்பட்ட காலம் சந்திரகுப்தன், பிந்துசாரன், அசோகன் ஆகியவர்கள் காலம். ஆதலின், அக்காலத் துத் தமிழ்வேந்தர் வடநாடுசெல்ல இயலாது. கி. மு. 184—கி. மு. 148வரை புஷ்யமித்திர சுங்காவின் காலம். கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகள் ஆந்திரர் வலுப்பெற்றிருந்த காலம். ஆதலின் தமிழ் வேந்தர் வடநாட்டில் படையெடுத்த காலம் (1) அசோகனுக்குப் பிற்பட்ட மோரியர் காலம் கி. மு. 232-கி. மு. 184 ;(2) புஷ்யமித்ர சுங்காவிற்குப் பிற்பட்டகாலம் கி. மு. 148—கி. மு. 27 ;(3) ஆந்தி ரர் வலி குன்றிய மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் ஆதல்வேண் டும் என்பார் திரு. ஆராவமுதன் அவர்கள். இதனிற் சிறிது வேறு பட்டுக் கூறுவர் திரு. மா. இராஜமாணிக்கம்பிள்ளையவர்கள். அஃதா வது 'கௌதமிபுத்ர சதகர்ணியின் மகனான புலுமாயிருக்குப்பின் வந்தஆந்திர அரசர்கள் வலியற்றவர் ஆதலின், கி. பி.163—கி. பி. 300க்கு இடைப்பட்டகாலம் வடநாட்டுப்படையெடுப்புக்குரிய கால

மாகும், என்பதே. இக்காலம் செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்புக்குரிய காலமாகும் என்பர். மகதநாட்டுமன்னர்கள் வலியற்றிருந்த காலம் கி. மு. 73—கி. மு. 28. ஆதலின் புஷ்யமித்ரசுங்கரின் பிற்பட்டகாலமாகிய கி. மு. 148—கி. மு. 27க்குட்பட்ட காலமாகத்தான் ஆகவேண்டும். கரிகாலன் ஈழநாட்டின்மீதும் படையெடுத்தனன் என்றசெய்தி யுள்ளதனால் ஈழநாட்டில் தமிழர்ஆண்ட காலமாகிய கி. மு. 44-கி. மு. 17க்கு இடைப்பட்ட காலந்தான் வடநாடுசென்று வென்றிகண்ட கரிகாலன்காலமாகும். ஆதலின் இக்கரிகாலன் காலம் கி.மு. 60-கி.மு. 10. என்பர் திரு. மா. இராஜமாணிக்கம் பிள்ளையவர்கள். ஆதலின், யான் மேற்குறித்துவந்த முறைப்படி நோக்கின் வடநாடுசென்ற கரிகாலன் என்பான் பட்டினப் பாலையைப் பத்துநூறாயிரம் பொன்கொடுத்துக்கொண்ட திருமாவளவனே யாவன் என்பதும், கரிகாலன் என்னும் பெயருடன் அவனுக்கு முன் இருவர் வாழ்ந்தனர் என்பதும் புலனும். பெருஞ்சேரலாதனை வென்ற கரிகாலனும் பொருநராற்றுப்படை பட்டினப் பாலைத் தலைவனுன கரிகாலனும் இருவேறு மன்னர்கள் என்பர் திரு. மா. இராஜமாணிக்கம்பிள்ளையவர்கள். பொருநராற்றுப்படைத் தலைவனும் பட்டினப்பாலைத் தலைவனும் இருவேறு மன்னர்கள் என்பர் திரு. ரா. இராகவையங்கார் அவர்கள். இருவரது கருத்தையும் சீர்தூக்கின் கரிகாலன் என்னும் பெயருடையார் மூவர் என்பதும், வடநாடு சென்றவன் திருமாவளவனே என்பதும் தெள்ளிதிற் புலனும்.

இனி, சங்ககாலத்து மன்னர்களைப்பற்றி இலக்கியங்கள் கூறுவனவற்றைக் காண்போம்.

[தொடரும்]

வளருந் தமிழ்

(பதிப்புரிமை.)

வித்துவான் பண்டிதர் திரு. கா. போ. இரத்தினம் அவர்கள், பி. ஏ. ஆனர்ஸ் (லண்டன்), எம். எ., பி. ஓ. எல். (சென்னை)
தமிழ்மறைக் கழகத்தலைவர், கொழும்பு.

தமிழ்மொழி எப்பொழுது தோன்றியது? எவ்வளவு காலமாக வளர்ந்துவருகிறது? இவ்வினாக்களுக்குத் திட்டமாக விடை கூற முடியாது. உலகத்திலேயுள்ள மொழிகளுள்ளே மிகப்பழையன வாகக் கருதப்படுவன சமஸ்கிருதம், இலத்தீன், கிரீக்கு முதலியன வாகும். இம் மொழிகள் யாவற்றுக்கும் முன்னர் தமிழ்மொழி தோன்றியது. இம்மொழிகள் யாவும் இப்பொழுது பேச்சு வழக்கற்று இறந்துவிட்டன. ஆனால், தமிழ்மொழியோ இன்றும் வளர்ந்துகொண்டே யிருக்கிறது. என்றும் அழியாத இளமையுடன் இருக்கும் பேரியல்புடையதாகையாற்றான் புலவர்கள் இதனைக் "கன்னித்தமிழ்", "தெய்வத்தமிழ்", "பைந்தமிழ்" என்று பல வாறு போற்றினர்போலும். என்றும் வளருந்தமிழாக விளங்கும் நமது மொழியிலே தோன்றிய இலக்கிய விலக்கணங்களின் வரலாற்றைச் சுருக்கமாக ஆராய்வோம்.

அகத்தியம்

இலக்கியம் உள்ளனவாகத் திகழும் மொழிகளுள்ளே தமிழைத் தவிர்ந்த ஏனையவற்றிலே முதன்முதற் றோன்றிய நூல்கள் இவை எனவும், அவை தோன்றிய காலங்கள் இவை எனவும் திட்டமாகக் கூறலாம். ஆனாற்றமிழிலே முதன்முதற் றோன்றிய நூல் இன்னது என்று கூற முடியாது. எமக்குக் கிடைத்துள்ள நூல்களுள்ளும், பெயரளவில் அறியப்படும் நூல்களுள்ளும் மிகப்பழமையானதென்று கொள்ளப்படுவது அகத்தியமேயாகும். இந்த அகத்தியம் ஓரிலக்கண நூலாதலின் இதற்குமுன்னர்ப் பல இலக்கியநூல்கள்

இருந்திருக்க வேண்டுமென்பதற்கு ஐயமில்லை; "இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பலே" முறையாதலின். இந்த அகத்தியம் எனும் நூலும் இப்பொழுது கிடைக்கவில்லை. அதிலிருந்து உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்ட சில சூத்திரங்களே இப்பொழுது காணப்படுகின்றன. அகத்தியம் முதலிடைச்சங்க காலங்களிலே முதன்மைபெற்று விளங்கியதென்று இறையனார் அகப்பொருளுரை கூறுகிறது. அகத்தியர் முதற்சங்க காலத்தில் வாழ்ந்தார் என்பர். இறையனார் அகப்பொருளுரையின்படி இற்றைக்கு ஏறக்குறைய ஏழாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமே முதற்சங்க காலமாகும். இந்தக் கணக்கை இக்காலத்தில் ஏற்றுக் கொள்பவர் மிகச் சிலர். அகத்தியம் எனும் நூலை இயற்றிய அகத்தியருடைய காலம் இன்னும் ஐயத்துக்கிடமின்றித் தீர்க்கப்படவில்லை. இந்த அகத்தியரே அன்றிப் பல்வேறு காலங்களில் பல்வேறு நூல்களை இயற்றிய அகத்தியரும் பலராவர். [1]அகத்தியர் எனும்பெயரையுடையவர்களைப்போலவே ஔவையார், நக்கீரர், கபிலர், பொய்கையார், கல்லாடர், பெருந்தேவனார், ஒட்டக்கூத்தர் முதலிய பெயர்களையுடைய புலவர்களும் பலர் தமிழ் நாட்டில் இருந்தனர். புலவர்கள் மாத்திரமன்றி ஒரே பெயரையுடைய அரசர்களும் தமிழ்நாட்டிலும் பிறநாடுகளிலு மிருந்தார்கள். இப்பொழுதும் ஒரேபெயரையுடைய மக்கள் எல்லா நாடுகளிலுமுளர். ஆதலின் ஒரேபெயரையுடைய புலவர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்தனரெனக் கொள்வது உலகவழக்குக்கு 'மாறானதன்று. இவர்களை வேறுபடுத்தி அறிந்துகொள்ளாமையாலும், வழங்காமையாலும், பல பொய்க்கதைகளும், முரண்பாடுகளும் தமிழ்நாட்டிலேற்பட்டன. இனியாவது நாம் இவர்களை வேறுபடுத்தி வழங்குதல் நன்று. முதலாம், இரண்டாம் என எண்ணடைகளை இணைத்தோ; சங்ககால, இடைக்கால எனக் கால அடைகளைச்சேர்த்தோ; பாரதம் பாடிய, அகத்தியம் இயற்றிய என நூலடைகளைப் பொருத்தியோ வழங்கலாம்.

---

[1] (அ) அகத்தியர் வரலாறு:—அ. சிதம்பரனார் அவர்கள்.

(ஆ) தமிழ் வரலாறு:—ரா. இராகவ ஐயங்கார் அவர்கள்; பக்கம் 214.

தொல்காப்பியம்

அகத்தியருடைய மாணவர் என்று கூறப்படும் தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம் எனும் நூலின் காலங்கூட நன்கு வரையறுக்கப்பட்டிலது. தொல்காப்பியம் தோன்றியது இரண்டாஞ்சங்க காலம் என இறையனார் அகப்பொருளுரை கூறுகிறது. அவ்வுரையின்படி இரண்டாஞ்சங்ககாலம் இற்றைக்கு மூவாயிரத்தைஞ்ஞூறு வருடங்களுக்கு முந்தியது. இதனை ஏற்காதவர்கள் கி. மு. ஆறும் நூற்றாண்டளவினிலே தொல்காப்பியம் தோன்றியதென்கின்றனர். தொல்காப்பியகாலத்தை இதற்கும் பின்னர்எனக் கூறினாரும்உளர்.[1] இப்பொழுதுள்ள தமிழ்நூல்களுள் மிகப்பழையது தொல்காப்பியம் என்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை. எழுத்து, சொல், பொருள் எனும் மூன்றின் இலக்கணங்களையுங் கூறும் மூன்று பிரிவுகளையுடைத்து இந்நூல். பொருளதிகாரத்திலேயே அணி யாப்பு என்பவற்றின் இலக்கணமும் உரைக்கப்பட்டுளது.

இந் நூலினைப் பிரமாணமாகக்கொண்டு இயற்றப்பட்ட செய்யுள்களை கடைச்சங்க காலத்துத் தொகைநூல்களிற் காணப்படுகின்றன. நன்னூல் இயற்றப்பட்ட காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை தொல்காப்பியம் ஒப்புயர்வற்ற தனி இலக்கண நூலாக விளங்கிற்று. அக்காலத்திலே தமிழிற் புலமைபெற விரும்பினவர்கள் இதனைப் போற்றிப் படித்தார்கள். பன்னிரண்டாம் பதின்மூன்றும் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்களிற் சிலர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதினர். இந்நூலுக்கு முதன் முதல் உரை எழுதிய இளம்பூரணர் இன்றுவரையும் உரை ஆசிரியர் என்று போற்றப்படுகிறார். திருக்குறளை அடுத்துப் பல அறிஞர்கள் எழுதிய உரைகளையுடைய நூல் தொல்காப்பியமேயாகும். இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர் முதலியோர் உரை எழுதியுளர்.

---

[1] கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின்பின் என்பார் K. N. சிவராச பிள்ளை அவர்கள்; The chronology of the early Tamils, Page 264.

கடைச்சங்க நூல்கள்

முதலிடைச் சங்கங்களிலே இயற்றப்பட்ட நூல்களுள் தொல்காப்பியம் ஒழிந்த ஏனையயாவும் கடலாலும், நெருப்பாலும், கறையானாலும் அழிக்கப்பட்டன. இந்நூல்களிற் சிலவற்றின் பெயர்களைமாத்திரம் இறையனாரகப்பொருளுரை குறிப்பிடுகிறது. இவற்றின் பின்தோன்றிய கடைச்சங்ககாலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது. இக்காலத்திற்றோன்றிய நூல்களைப் பொதுவாகச் சங்கநூல்கள் என்றும் சங்கம் மருவிய நூல்கள் என்றும் வழங்குகின்றனர். இவற்றைப் பிற்காலத்தில் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என இரண்டு பிரிவாக வகுத்தனர். கணக்கு என்பது நூலைக் குறிக்கிறது. மேற்கணக்கிலே பதினெட்டு நூல்களும் கீழ்க்கணக்கிலே பதினெட்டு நூல்களும் உள.

மேற்கணக்கு

பதினெண் மேற்கணக்கை, எட்டுத்தொகை பத்துப்பாட்டு என இரண்டாகவும் பிரித்துளர். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து பரிபாடல், கலித்தொகை, அகநானூறு எனும் எட்டு நூல்களுமே[1] எட்டுத்தொகையாகும். பல புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுதிகளாதலின் இவை தொகைநூல்கள் எனப்பட்டன. இவற்றுளே நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு எனும் ஐந்தும் அகப்பொருளைப் பற்றிய செய்யுள்களை உடையன. ஏனைய மூன்றும் புறப்பொருளைப்பற்றிய செய்யுள்களை உடையன. பல்லாற்றானும் ஒத்த ஒருவனும் ஒருத்தியுங் கூடுங்காலத்தில் பிறப்பதும் அகவுணர்வு மாத்திரையானே அறியப்படுவதுமாகிய இன்பத்தை அகமென்றனர்.

---

1 "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்துங் கலியோ டகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை.

ஏனையவற்றைப் புறம் என்றனர். இவ்வொருவனுக்கும் ஒருத்திக்கும் இடையிலேற்படும் காதல் ஒழுக்கத்தை அகத்திணை யென்றனர். ஏனையவற்றைப் புறத்திணை என்றனர். அகப்பொருளின் மையம் காதல்; புறப்பொருளின் மையம் வீரம். வீட்டிலிருந்து வாழும் இன்பவாழ்வு அகப்பொருள்; குடியியல். குடிகளைக் காத்தும் பொருள் பெருக்கியும் வீரத்துடன் வாழுதல் புறப்பொருள்; அரசியல். அறம் பொருள் இன்பம வீடு என்பனவற்றில் இன்பம் அகப்பொருளாகும். அறமும்பொருளும், புறப்பொருளாகும். அகப்பொருளாலும் புறப்பொருளாலும் அடையப்படுவது வீடாகும். நிற்க.

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன பத்துப்பாட்டாகும்[1]. இவற்றுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை எனும் மூன்றும் அகப்பொருள் பற்றியன; ஏனைய புறப்பொருள் பற்றியன.

இந்தப் பத்து நூல்களும் மிகச்சிறந்த இலக்கிய நயமுடையனவாய் மிளிர்கின்றன. தமிழ்மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்கள் போற்றிய சிறந்த கொள்கைகளையும் பல வரலாற்றுக் குறிப்புக்களையும் நன்கு வெளிப்படுத்துகின்றன. தமிழர்களுடைய சிறந்த நாகரித்தின் சின்னமாகவும் இருக்கின்றன.

கீழ்க்கணக்கு

திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவைநாற்பது, இன்னாநாற்பது, களவழிநாற்பது, ஐந்திணைஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழிஐம்பது, திணைமொழிநூற்றைம்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், இன்னிலை,

---

[1] 'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து''

முதுமொழிக்காஞ்சி, ஏலாதி எனும் பதினெட்டும் கீழ்க்கணக்கு நூல்களாகும்[1]. இவையாவுங் கடைச்சங்க காலத்திற் றோன்றியன எனக் கூறமுடியாது. இவற்றுள் சிலவற்றை கி. பி. ஐந்தாம் ஆறும் நூற்றாண்டுகளில் தோன்றியனவென்றே கொள்ளவேண்டும்.

திருக்குறள்

இப்பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுளெல்லாம் மிகச் சிறந்தது திருக்குறளாகும். திருவள்ளுவர் இயற்றிய இந்தச் சிறந்த நூல் உலகப்பெருநூலாக இன்று விளங்குகின்றது. தமிழ்மொழியின் சிறப்பையும் தமிழ்மக்களின் பெருமையையும் இன்று உலகமெங்கும் முழக்குகிறது. இஃது எப்பொழுது தோன்றியதென்பதைத் திட்டமாகக் கூறமுடியவில்லை. திருக்குறள் கி. மு. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கும் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் இடையில் தோன்றியதென்பாரும்[2], கி. மு. முதலாம் நூற்றாண்டில் தோன்றியதென்பாருமுளர். வேறு கூறுவாருமுளர். திருவள்ளுவருடைய நூலினைப் போற்றாத தமிழ்ப் புலவர்கள் இல்லை. 'பொய்யாமொழி' எனவுந் 'தமிழ்மறை' எனவும் கொண்டாடப்படும் இந்நூலினைப் புகழ்ந்து திருவள்ளுவமாலை எனும் ஒரு நூல் ஆக்கப்பட்டுள்ளது. தமிழ்நூல்களுளெல்லாம் மிகச்சிறந்த நூல் திருக்குறளே என்பதைப் பலபுலவர்கள் எடுத்துக் காட்டியுள்ளர். நல்வழிப் பாட்டொன்று வேதாந்தம், தேவார திருவாசகங்கள், திருமந்திரம், முதலியனவும் தேவர் குறளும் ஒரு தன்மையன என்றுரைக்கிறது[3].

---

[1] நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொற் காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந் நிலைய வாங்கீழ்க் கணக்கு."

தமிழ் இலக்கிய வரலாறு:—கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

இத்தகைய பெருமை வாய்ந்த திருக்குறளுக்குத் தருமர், மணக்குடவர், தாமத்தார், நச்சர், பரிமேலழகர், பருதி, திருமலையர், மல்லர், காளிங்கர், பரிப்பெருமாள் எனும் பதின்மர் உரை செய்தனார்[1]. இவ்வுரைகளுள் பரிமேலழகர் உரையினையே அறிஞர்கள் சிறந்ததெனக் கொண்டுளர்.

"நாலும் இரண்டுஞ் சொல்லுக் குறுதி" எனும் பழமொழியில் இரண்டு என்பது திருக்குறளையும் நாலு என்பது நாலடியாரையுங் குறிக்கின்றன. நாலடியாரும் திருக்குறளைப்போல் அறம் பொருள் இன்பங்களைத் திறம்பட விளக்கிக் கூறும் ஒரு சிறந்த நூலாகும். இதனைச் சமணமுனிவர்கள் இயற்றினார்கள்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

கடைச்சங்ககாலத்தின் இறுதியிற்றோன்றிய இரு காப்பியங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையுமாகும். இவை கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலே இயற்றப்பட்டன. இவற்றின் காலத்தை கி. பி. ஆறும் நூற்றாண்டெனப் பிழைபடக் கூறுவாரும் உளர். சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகளும் மணிமேகலையைச் சாத்தனாரும் பாடினர். "முழுதும் பழுதற்ற முத்தமிழ்க் காப்பியம்" எனப் போற்றப்படும் சிலப்பதிகாரத்தின் பெருமையை "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம்படைத்த தமிழ் நாடு" எனும் பாரதியார் பாட்டே நன்குவிளக்கத்தக்கது. இதன்பின்னர் வந்த தமிழ்க்காவியங்கள் போல் அல்லாமல், இது ஒன்று மாத்திரமே தனிச்சிறப்புடன், தமிழ்நாட்டுக்கதையைத் தீட்டிக் காட்டும் ஒப்பற்ற ஓவியமாக மிளிர்கின்றது. தமிழ்மக்கள் இழந்த இசைநாடகக் கலைகளின் பெருமையையும் பரப்பையும் இன்றும் அறிதற்கு வாயிலாக இருக்கும் ஒரு நூல் இதுவேயாகும். மணிமேகலை, துறவின் பெருமையையும் சாத்தனாரின் செய்யுள் திறனையும் ஒருங்கே காட்டும் சிறந்த காப்பியமாகும்.

---

1 "தருமர் மணக் குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்கு
எல்லையுரை கண்டார் இவர்"

கி. பி. மூன்றாம் நூற்றாண்டு

இது வரையும் கடைச்சங்க காலத்திலும் அதன் இறுதியாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும் தோன்றிய நூல்களை அறிந்தோம். இனி அடுத்த நூற்றாண்டுகள் ஒவ்வொன்றிலும் தோன்றிய நூல்களைக் காண்போம். மூன்றாம் நூற்றாண்டிலே மாணிக்கவாசகர் திருக்கோவையாரையும் திருவாசகத்தையும் பாடினார். இவருடைய காலத்தை எட்டாம் நூற்றாண்டென்பார் கூற்றுப் பொருத்தமற்றது[1]. "திருவாசகத்திற் குருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" எனும் முதுமொழி திருவாசகப்பெருமையைக் காட்டுதற்குப் போதுமானது. திருவாசகம் அறுநூறும் தேனூறும் வாசகங்களாக இலங்குகின்றன. தமிழிலே தோன்றிய கோவைகளுள் முதற்றோன்றிய கோவை திருக்கோவையாராகும். இதற்குப் பேராசிரியர் ஓருரை எழுதியுளர். தொல்காப்பியம் திருக்குறள் எனும் இருநூல்களோடு ஒத்த பெருமையுடையது திருக்கோவையார் என்று இலக்கணக்கொத்துக் கூறுகிறது.[2]

[தொடரும்]

---

[1] தமிழ் இலக்கிய வரலாறு:—கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள்.

[2] "பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்."

*கார்பன்-டை - ஆக்ஸைடு

திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B. A., B. L., சென்னை.

நம்மைச் சூழ உள்ள வாயுமண்டலமானது பல வாயுக்களின் கலவை என்றும், அவற்றுள் ஆக்ஸிஜன் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்கும் நைட்ரஜன் ஐந்தில் நாலு பங்குமாக உள்ளன என்றும், ஆக்ஸிஜன் உயிருக்கு ஆதாரமாகவும் நைட்ரஜன் எல்லா உயிர்களின் அமைப்பில் ஒரு பகுதியாகவும் இருக்கின்றன என்றும் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இவ்விரண்டு வாயுக்களைத் தவிர வேறு சில வாயுக்களும் வாயுமண்டலத்தில் இருக்கின்றன என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். அவற்றுள் ஒன்று கார்பன்-டை-ஆக்ஸைடு என்பது.

கார்பன்-டை-ஆக்ஸைடு வாயுமண்டலத்தில் மிகக் குறைவான அளவில்தான் காணப்படுகிறது. அளவுப்படி பார்த்தால் இது வாயு மண்டலத்தில் இரண்டாயிரத்து ஐந்நூறில் ஒரு பங்குக்கும் குறைவு. ஆயினும், வாயுமண்டலம் நெடுந்தூரம் பரவியிருப்பதால், மொத்தக் கணக்கில் ஏராளமான கார்பன்-டை-ஆக்ஸைடு வாயுமண்டலத்தில் இருக்கிறது. அதன் எடையைக் கூட இரண்டு லக்ஷம் கோடி டன் என்று விஞ்ஞானிகள் நிர்ணயித்திருக்கிறார்கள்.

இது வாயுமண்டலத்தில் இருப்பதாக நமது கண்ணுக்கோ மூக்குக்கோ தெரிவதில்லை. ஆதலால், இது நிறம் அற்றது, மணமும் அற்றது என்று எளிதாகச் சொல்லிவிடலாம். இதில் உயிர் வாழமுடியாது; நெருப்பு எரிய முடியாது. ஆயினும், இது விஷம் அன்று. இப்படிச் சொல்வது சற்றே விபரீதமாகத் தோன்றலாம். தண்ணீரில் நில-

---

*இது சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் 24-2-53-ல் ஒலிபரப்பியது. அந்நிலையத்தார் அநுமதியுடன் வெளியிடப்படுகிறது.

உயிர் வாழமுடிவதில்லை, நெருப்பும் எரிவதில்லை. தண்ணீர் விஷம் என்று சொல்லக் கூடுமோ? கார்பன்-டை-ஆக்ஸைடில் உயிரும் நெருப்பும் அவிந்து போவதற்குக் காரணம், இது நிறைந்துள்ள இடத்தில் உயிருக்கும் நெருப்புக்கும் இன்றியமையாத ஆக்ஸிஜன் இல்லாமற் போவதேயாகும்.

வாயுமண்டலத்திலுள்ள ஆக்ஸிஜனும் நைட்டிராஜனும் உயிர்ப் பிராணிகளாலும் தாவரங்களாலும் ஏற்கப்பட்டுக் குறைந்து போகின்றன என்றும், தாவரங்களின் உதவியாலும் பாக்டீரியாக்களின் உதவியாலும் அவை மீண்டும் வாயுமண்டலத்தை வந்தடைகின்றன என்றும் முன்னால் கேட்டிருக்கிறீர்கள். அவற்றைப் போலவே கார்பன்-டை-ஆக்ஸைடும் வாயுமண்டலத்தை விட்டு நீங்கியும், வாயுமண்டலத்தை அடைந்தும் வருகிறது. வாயுமண்டலம் பொதுவாக ஒரே நிலையில் இருக்கிறது. நெருப்பு எரிவதாலும், தாவரங்களும் பிராணிகளும் மூச்சு விடுவதாலும், அழுகுவதாலும், பொருள்கள் நொதித்துப் போவதாலும் கார்பன்-டை-ஆக்ஸைடு இடைவிடாமல் உண்டாக்கப்பட்டு வாயுமண்டலத்தை அடைந்துகொண்டேயிருக்கிறது. சிற்சில எரிமலைப்பிரதேசங்களில் இது மிகுந்த அளவில் எரிமலையின் வாயிலிருந்து கக்கப்படுகிறது. சிற்சில இடங்களில் நிலத்திலிருந்து ஊற்று நீர் கசிவதுபோலக் கசிந்து வெளி வருகிறது. இது காற்றைவிடக் கனமுள்ளது. ஆதலால், இது கசியும் இடங்களில், இது நிலமட்டத்திலிருந்து இரண்டு மூன்று அடி உயரம் வரையே தங்குகிறது. அந்தப் பிரதேசங்களில் மனிதர் யாதொரு தீங்கும் இன்றி நடந்து செல்லலாம். நாய்கள் சென்றால், சுருண்டு விழுந்து மடிந்து போகும். அங்குள்ள கார்பன்-டை-ஆக்ஸைடு மனிதருக்கு நிலைக்கும் ஆழம் உள்ளது; நாய்களுக்கு நிலைக்காத ஆழம் உள்ளது என்று சொல்லலாம். நேபிள்ஸ் நகரின் அருகிலுள்ள இவ்வகைக் குகை ஒன்றுக்கு "நாய்க்குகை" என்று பெயர். ஜாவாத்தீவிலும் இவ்வகையான இடம் ஒன்று இருக்கிறது. அதற்குச் "சாவுப் பள்ளத்தாக்கு" என்று பெயர்.

பொருள்கள் அழுகுவதால் இது உண்டாவதாலும், இது காற்றை விடக் கனமுள்ளதாதலாலும், இறைக்காத பாழுங்கிணறு சாக்கடை முதலியவற்றில் இது உண்டாகித் திரள்கிறது. அஜாக்கிரதையாக இவற்றில் இறங்குவோர் சிலருக்கு இதனால் உயிர்ச்சேதம் உண்டாகிறது. இவ்வகையான இடங்களில் இறங்குமுன் ஒரு விளக்கை ஒரு வாளியில் வைத்து, மெதுவாகக் கீழே இறக்கவேண்டும். விளக்கு மங்காமல் எரிந்தால் அபாயம் இல்லை. விளக்கு மங்கி அவிந்துபோனால், உயிருக்கு அபாயம் என்று தெரிந்து கொள்ளவேண்டும். அங்கே கார்பன்-டை-ஆக்ஸைடு அதிகமாகத் தங்கியிருக்கிறது என்பது தெளிவு.

நாம் உள்ளே சுவாசிக்கும் காற்றில் இது இரண்டாயிரத்து ஐந்நூறில் ஒரு பகுதி இல்லை. ஆனால் நாம் வெளிவிடும் காற்றில் இது முப்பதில் ஒரு பங்காக இருக்கிறது. இதற்குக் காரணம் நமது நுரையீரலில் நிகழும் ஓர் அற்புதச் செயல். காற்றிலுள்ள ஆக்ஸிஜன் இரத்தத்திலுள்ள அசுத்தங்களோடு கலந்து, இரத்தத்தைத் தூய்மையாக்கி, தான் அழுக்கடைந்து, கார்பன்-டை-ஆக்ஸைடாக மாறி வெளியே வருகிறது என்பது நீங்கள் அறிந்த விஷயம்.

இப்படிக் கோடானுகோடி உயிர்கள் மூச்சுவிடுவதாலும், முன்னே சொன்ன வேறு காரணங்களாலும், கார்பன்-டை-ஆக்ஸைடு வாயுமண்டலத்தில் ஓயாது கலந்துகொண்டேயிருப்பதால், வாயுமண்டலமும் பாழுங்கிணற்றைப்போல் தீயதாக வேண்டுமே. அப்படி ஆகாமல் ஒரேநிலையில் இருந்து வருகிறதே. இதற்குக் காரணம் என்ன? தாவரங்கள் தம்முடைய பசுமை நிறமான இலைகளால், சூரிய வெளிச்சத்தின் துணையைக் கொண்டு, இயற்றும் மிக மிக அற்புதமான ஒரு விந்தைச் செயலே இதற்குக் காரணம். இதற்கு ஒளிச்சேர்க்கை என்று பெயர்.

தாவரங்களின் பச்சை இலைகளின் பசுமை நிறத்துக்குக் காரணம் அவற்றிலுள்ள தூள் போன்ற ஒரு விந்தைப் பொருள். அது பச்சை

நிறமானது. அதற்குக் குளோரோபில் என்று பெயர். தாவரங்கள் வேரின் வழியாகப் பருகும் நீரையும், தாவரங்களைச் சூழ உள்ள காற்றில் உள்ள கார்பன்-டை-ஆக்ஸைடையும், சூரிய வெளிச்சத்தின் துணையால், ஒன்றாக இணையச் செய்யும் அற்புதமான இரசாயனத் திறமை இந்தக் குளோரோபில்லுக்கு இருக்கிறது. இந்த இரசாயன மாறுபாட்டால் ஆக்ஸிஜனும், ஸ்டார்ச்சும் உண்டாகின்றன. ஆக்ஸிஜன் வெளிப்பட்டுவாயுமண்டலத்தில் கலக்கிறது. ஸ்டார்ச்சு செடிகளின் இலைகளுக்குள்ளே தங்கி, தாவரத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

ஒளிச் சேர்க்கையால் தாவரங்கள் வாயுமண்டலத்திலுள்ள கார்பன்-டை-ஆக்ஸைடில் ஒரு பகுதியை நீக்கிவிடுகின்றன; தூய ஆக்ஸிஜனை அதற்கு அளிக்கின்றன. இப்படி இருவகையாக வாயுமண்டலம் தன் சுய நிலையை அடைகிறது.

கார்பன்-டை-ஆக்ஸைடு தண்ணீரில் கரையும் இயல்புள்ளது. இது கரைந்துள்ள தண்ணீரே "சோடா" எனப்படுவது. அதைப் பருகினால் அது சற்றே புளிப்பான சுவை உடையது என்பது உங்களுக்குத் தெரியும். லெமனேட் முதலிய பலவகைத் தித்திப்புப் பானங்களிலும் கார்பன்-டை-ஆக்ஸைடு நிறையக் கரைந்திருக்கிறது. அதனால் அவைகளுக்கு ஒரு தனியான சுவை இருக்கிறது. அவைகளை அடைத்த சீசாக்களைத் திறக்கும்போது கார்பன்-டை-ஆக்ஸைடு டப் என்ற வெடிப்போடு வெளிப்பட்டு, தான் மிகுதியாகக் கரைந்துள்ள நீரிலிருந்து கொப்புளித்துக்கொண்டு வெளியே வருவதை நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம்.

"ஒருவனுக்கு உணவே மற்றவனுக்கு நஞ்சு" என்னும் ஆங்கிலப் பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். இந்தப் பழமொழி கார்பன்-டை-ஆக்ஸைடு விஷயத்தில் பலவிதத்தில் உண்மை. கார்பன்-டை-ஆக்ஸைடை நாம் நாசியின் வழியாக நுரையீரலில் மேன்மேலும் உட்

கொண்டு வந்தால், நமது இரத்தம் தூய்மை பெருமல், மேன்மேலும் அசுத்தமாகும். அதனால் நமது உடல் நஞ்சுற்று உயிர் நீங்கும். ஆனால், அதே கார்பன்-டை-ஆக்ஸைடை வாயின் வழியாக வயிற்றுக்குள் உட்கொண்டால், அது வாய்க்கு உருசியாயிருக்கும்: வயிற்றுக்கும் உடலுக்கும் நன்மை பயக்கும். எல்லா உயிர்களுக்கும் அடிப்படியில் உணவாக உள்ள தாவரங்களுக்கு அதுவே போஷணை அளிக்கும் பொருள் என்றுகூடச் சொல்லலாம். ஆகவே, அதுவே எல்லா உயிர்களுக்கும் அடிப்படையான ஆதாரம். அதுவே "உயிரின் அச்சாணி" என்று கூறப்படுவது பெரும்பான்மையும் உண்மை.

கார்பன்-டை-ஆக்ஸைடின் தீய குணத்தையும் நாம் பயன்படுத்தக் கற்றுக்கொண்டு விட்டோம். பெரிய கட்டடங்கள், நாடகசாலைகள், சினிமாக் கொட்டகைகள் முதலிய பொது இடங்களில் இரசாயன நெருப்பணை கருவிகள் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அக்கருவிகளின் உட்புறத்திலே கார்பன்-டை-ஆக்ஸைடு வாயுவை இரசாயன முறையில் இயற்றுவதற்கான ஏற்பாடு அமைக்கப்பட்டிருக்கும். அந்தக் கருவியைப் பயன்படுத்தும்போது, அக்கருவியின் உட்புறத்திலிருந்து சிறிது நீரும் கார்பன்-டை-ஆக்ஸைடுமாக வெளிப்பட்டு, வேகமாகப் பீச்சும். அதை நெருப்புப் பற்றிய இடத்தின் மீது குறிப்பாக எய்தால், அங்கே கார்பன்-டை-ஆக்ஸைடு ஏராளமாகச் சொரியப்பட்டு நெருப்பைச் சூழும். அதனால், நெருப்பு எரிவதற்கு இன்றியமையாத ஆக்ஸிஜன் அணுகாமல் ஒதுக்கப்படும். ஆகவே, நெருப்பு விரைவில் அவிந்து போகும்.

வாயுமண்டலத்திலே சுயேச்சையாகத் திரியும் கார்பன்-டை-ஆக்ஸைடு சிறிதளவு நீரிற் கரைந்து காணப்படுகிறது. சீமைச்சுண்ணாம்பு சலவைக்கல் போன்ற பலவகைப் பொருள்களில் வேறு சிலவற்றோடு இணைந்து காணப்படுகிறது. நன்முத்திலும், கோழிமுட்டையின் ஓட்டிலும் அது ஒரு பகுதியாக உள்ளது.

சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் வான் ஹெல்மாண்ட் என்பவர் இதை இயற்றினர். சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த பிளாக் என்பவர் இதற்கு "ஸ்திர வாயு" என்று பெயரிட்டார். அவருக்குச் சமகாலத்தவரான லவாய்சியே என்பவர் இதற்குக் கார்பானிக் ஆசிட் என்று பெயர் கொடுத்தார். இந்தப் பெயரைக் கொண்டு நாமும் இதைக் "கரியமிலவாயு" என்று சொல்லி வந்தோம். ஆனல், இக்காலத்து விஞ்ஞானிகள் இதற்கு ஒரு புதிய பெயரைச் சூட்டி, இதைக் கார்பன்-டை-ஆக்ஸைடு என்கிறார்கள். பல்லை உடைக்கும் இந்தப் பெயரே இதற்கு நிலைத்து விட்டது. நமக்குள்ளும் அழகான பெயர் இல்லாத நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள் அல்லவா?

வாயு மண்டலத்திலுள்ள அரிய வாயுக்கள்

திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B. A., B. L., சென்னை.

நம்மைச் சுற்றி உள்ள வாயுமண்டலத்தில் இருக்கும் ஆக்ஸிஜன், நைட்டிரஜன், கார்பன்-டை-ஆக்ஸைடு என்னும் மூன்று வாயுக்களைப் பற்றி முன்னால் உங்களுக்குச் சொன்னேன். இவைகளைத் தவிர வேறு சில வாயுக்களும் நமது வாயுமண்டலத்தில் இருக்கின்றன. அவை விசித்திரமான இயல்புள்ளவை. அவைகளைக் கண்டுபிடித்த விருத்தாந்தமும் ரசமானது. அவைகளைப்பற்றி இப்போது சிறிது சொல்லுகிறேன்.

அறிஞர்கள் தங்களைச் சூழ உள்ளவைகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிய காலம் முதல் சுமார் நூற்றெண்பது வருஷங்களுக்கு முன் வரை, அதாவது சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு மேலாக, வாயு மண்டலமானது வாயு என்னும் ஒரே பொருளால் அமைந்தது என்றே எண்ணிவந்தார்கள். சுமார் நூற்றெண்பது வருஷங்களுக்கு முன்னால் ஆக்ஸிஜன், நைட்டிரஜன் என்னும் வாயுக்களும் கார்பன்-டை-ஆக்ஸைடும் கண்டுபிடிக்கப்பட்டபின் வாயுமண்டலம் இம்மூன்று வாயுக்களின் கலவை என்று தெரியவந்தது. மேலும், வாயுமண்டலத்தில் மிகச் சிறு அளவில் அம்மோனியா எனப்படும் நவச்சார வாயுவும் நீராவியும் இருப்பதும் அவர்களுக்குத் தெரியும். அவைகளைத் தவிர வாயுமண்டலத்தில் வேறு ஒன்றும் இல்லை என்று அவர்கள் எண்ணிவந்தார்கள். இப்படிச் சுமார் நூறு வருஷங்கள் சென்றன.

அதன்பின், சென்ற நூற்றாண்டில், வேறு சில வாயுக்களும் வாயு மண்டலத்தில் இருக்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தத் துப்பறிவுக் கதை மிகவும் ரசமானது.

---

*சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் 10-3-53-ல் ஒலி பரப்பியது. அந்நிலையத்தார் அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

சென்ற நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த ரேலி பிரபு என்பவர் ஒரு சிறந்த விஞ்ஞானி. அவர் நைட்ரஜன் வாயுவின் எடையை நிர்ணயிப்பதில் ஈடுபட்டார். அதைப் பலமுறை நிறுத்துவரும்போது, எடைகளில் வித்தியாசம் ஏற்பட்டது. வாயுமண்டலத்தில் உள்ள வாயுவிலிருந்து ஆக்ஸிஜன் முதலியவற்றை நீக்கிவிட்டு, மிஞ்சிய நைட்ரஜனை நிறுத்தபோது, அதன் ஒரு லீட்டரின், அதாவது ஆயிரம் கன சென்டிமீட்டரின், எடைக்கும் இரசாயனமுறையில் இயற்றப்பட்ட தூய நைட்ரஜனின் ஒரு லீட்டரின் எடைக்கும் இடையே ஒரு கிராமில் நூற்றைம்பதில் ஒருபங்கு வித்தியாசம் காணப்பட்டது. இதைக் கண்டதும், அவர் தாம் நிறுத்தது தான் தவறாக இருக்கவேண்டும் என்று முதலில் நினைத்தார். ஆனால், பின்பு திரும்பத் திரும்ப நிறுத்துப் பார்த்ததில், தம்முடைய எடையில் பிசகு இல்லை என்று முடிவு செய்தார். ஆகையால், இதற்கு வேறு ஏதோ ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று அவர் தெரிந்துகொண்டு, அது என்ன காரணமாயிருக்கலாம் என்று பலவிதமாகத் தேடினார். வாயுமண்டலத்திலிருந்து கிடைத்த நைட்ரஜனில் இன்னும் ஏதோ ஒரு வாயு கலந்திருக்க வேண்டும் என்பது அவருக்குத் தெளிவாயிற்று. அந்த வாயுவைப் பிரித்தெடுக்க முயற்சி செய்தார். இதே சமயத்தில் ராம்சே என்னும் விஞ்ஞானியும் இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தார். இருவருமாகச் சேர்ந்து ஆராய்ச்சிகளை நடத்தினார்கள். அவர்கள் புதிதாக ஒரு வாயுவைப் பிரித்தெடுத்தார்கள். அதற்கு ஆர்கன் என்று பெயரிட்டார்கள்.

ஆர்கன் வாயுவானது வாயுமண்டலத்தில் நூற்றில் ஒரு பங்குக்குச் சற்றே குறைவான அளவில் கலந்திருக்கிறது. இது நிறமற்றது, மணம் அற்றது, சுவை அற்றது, கண்ணுக்குத் தெரியாதது. சற்றே நீரில் கரையும் இயல்புள்ளது. ஆகையால், இது சிற்சில இடங்களில் ஊற்று நீரிலும் காணப்படுகிறது. இது எந்தப் பொருளோடும் இரசாயன முறையில் இணைவதில்லை. ஒதுங்கித் தனியாக வாழும் இயல்புள்ளது. ஆதலால், இதைப் பெருங்குடிப்பிறந்த வாயு என்று சிலர் குறித்தார்கள். இது ஒன்றோடும் இணைவதற்கு வேண்டிய சுறுசுறுப்பு இல்

ன்றது; சோம்பலே வடிவெடுத்தால் போன்றது என்று இதை மந்தவாயு என்று சிலர் குறித்தார்கள், ஆகவே, சோம்பேறி என்று பொருள்படும் ஆர்கன் என்னும் பெயரை இதற்கு இட்டார்கள். அந்தப் பெயர் இதற்கு நிலைத்துவிட்டது. இந்த வாயுவை மற்றப் பொருள்களோடு இணையும்படி எத்தனையோ வகையாக முயன்றும் ஒரு முயற்சியும் சிறிதுகூடப் பயன்பெறவில்லை. இது முழுச் சோம்பேறி என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. ஆர்கன் வாயுவைக் கண்டுபிடித்தபின் அதற்குத் துணைவர்களாக வேறு சில வாயுக்களும் இருப்பது தெரியவந்தது. அவற்றைப் பிரித்துக் கண்டுபிடிப்பதற்கு முன் அவைகளுக்குப் பொதுவாக "ஆர்கனின் துணைவர்கள்" என்று பெயர் கொடுத்தார்கள். பின்பு ஒவ்வொன்றாகக் கண்டுபிடிக்கப்படவே, அவைகளுக்கு வெவ்வேறு பெயர் கொடுக்கப்பட்டது.

அவற்றில் ஒன்றுக்கு க்ரிப்டான் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இந்தப் பெயருக்கு ஒளித்துக்கொண்டிருக்கும் வாயு என்பது பொருள். இந்த வாயு உண்மையில் ஒளித்துக்கொள்ள முயலுவதில்லை. இது வாயுமண்டலத்தில் கிட்டத்தட்டப் பத்து லக்ஷத்தில் ஒரு பங்காக இருக்கிறது. ஆதலால்தான் இதைக் கண்டுபிடிப்பது அவ்வளவு கஷ்டமாக இருந்தது. வைக்கோற்போரில் கிடக்கும் ஊசியைத் தேடுவது இதைவிட எளிதான வேலை. இந்த வாயுவும் நிறமற்றது, மணமற்றது, சுறுசுறுப்பும் அற்றது.

ஆர்கனின் மற்றொரு துணைக்குப் பெயர் நீயான் என்பது. நீயான் என்னும் சொல்லுக்குப் "புதிய வாயு" என்று பெயர். அதுவரை யாரும் இதைக் கண்டுபிடிக்காததால் இந்தப் பெயரும் பொருத்தம் தான். இதுவும் வாயுமண்டலத்தில் மிகச் சிறு அளவில், அதில் கிட்டத்தட்ட ஐம்பத்தையாயிரத்தில் ஒரு பங்காக உள்ளது. இதுவும் நிறமற்றது, சுவையற்றது, மணமற்றது, சோம்பேறியானது.

இந்த இனத்தைச் சேர்ந்த மற்றொரு வாயுவுக்கு ஸீனன் என்று பெயர். இந்தச் சொல்லுக்குப் பழக்கம் இல்லாதவன், அன்னியன்

என்பது பொருள். இதுவும் பொருத்தமான பெயர்தான். இது வாயு மண்டலத்தில் மிக மிக அருகிக் காணும் வாயு. அதில் ஒரு கோடியில் ஒரு பங்காக உள்ளது. இதுவும் மற்றவைகளைப் போல் நிறம், மணம், சுவை, சுறுசுறுப்பு ஆகிய குணங்கள் ஒன்றும் இல்லாதது. ட்ராவெர்ஸ் என்பவரால் இது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கண்டு பிடிக்கப்பட்டது.

வாயுமண்டலத்தில் மிகக் குறைவான அளவில் காணப்படும் மற்றொரு வாயுவும் இந்த இனத்தோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. அது ரேடியம் சிதைவுபடும்போது வீசப்பட்டு வெளியே வருவதால் அதற்கு ரேடான் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் பழம் பெயர் நீட்டான்.

இவைகளைத் தவிர மற்றொரு வாயுவும் இந்தச் சோம்பேறி இனத்தைச் சேர்ந்தது. அதற்கு ஹீலியம் என்று பெயர். இதைக் கண்டு பிடித்த கதை ஆச்சரியமானது. சூரியனுடைய பிம்பத்தை நிறமாலை காட்டியால் லாக்கியர் என்னும் விஞ்ஞானி சோதித்தார். அப்போது நமது பூமியில் ஒருவரும் அதுவரை கண்டுபிடித்திராத புதிய வாயு ஒன்று சூரியனில் இருக்கக் கண்டார். உலகத்தில் இல்லாததாயும் சூரியனில் இருப்பதாயும் உள்ள அந்த வாயுவுக்குச் "சூரிய வாயு" என்ற பொருள் உள்ள ஹீலியம் என்ற பெயரை இட்டார். அவர் இதைச் சூரியனில் கண்டுபிடித்து முப்பது வருஷங்களுக்குப் பின்பு, இந்த வாயு பூமியின் வாயுமண்டலத்திலும் இருக்கிறது என்று ராம்சே கண்டுபிடித்தார். நமது பூமியிலுள்ள சில கனிப்பொருள்களிலிருந்து அது கசிகிறது என்றும் அவர் கூறினார். இது வாயுமண்டலத்தில் இரண்டு லக்ஷத்தில் ஒரு பங்காக உள்ளது. இதுவும் நிறமற்றது, சுவையற்றது, மணமற்றது, நெருப்பில் எரியாதது.

ஆர்கன், க்ரிப்டான், நீயான், ஸீனன், ரேடான், ஹீலியம் என்னும் வாயுக்கள் எல்லாம் மிகச் சிறு அளவில் வாயுமண்டலத்தில் இருக்

கின்றன. இவை அருகிக் காண்பதால் இவைகளுக்கு "அரிய வாயுக்கள்" என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

இவ்வாயுக்களுள் ஒன்றாவது மற்றெந்த வாயுவோடாவது; வேறெந்தப் பொருளோடாவது இணைந்து கூட்டுப் பொருள் ஆவதில்லை. சுறுசுறுப்பின்றி, மந்த இயல்பு உள்ளவைகளாய், இவை வெறும் சோம்பேறி வாழ்க்கை புரிகின்றன. தாம் இருப்பதைப் பிறர் அறியும்படி யாதொரு செயலும் இவை செய்வதில்லை. இவைகளுக்கு யாதொரு சிறப்பான இரசாயன குணமும் இல்லை. நிறம் அற்று, மணம் அற்று, சுவை அற்று, கண்ணுக்கும் தோன்றாமல், நிர்க்குணமாகவும் மிகச் சிறு அளவிலும் உள்ள மந்த சுபாவம் உடைய வாயுக்களை அவ்வளவு நெடுங்காலமாக அறிஞர்கள் தெரிந்துகொள்ளாமல் இருந்தது ஆச்சரியம் அன்று. அவற்றைக் கண்டுபிடித்து, அறிந்து, தனித் தனியே பிரித்துப் பெயர் சூட்டி, அவற்றின் தன்மைகளை இக்கால விஞ்ஞானிகள் தெரிந்து கொண்டதுதான் ஆச்சரியம். இதனினும் ஆச்சரியம் இவைகளைப் பயன் படுத்த அவர்கள் தெரிந்து கொண்டதாகும்.

ஒன்றுக்கும் உதவாத சோம்பேறி வாயுவை எப்படிப் பயன்படுத்த முடியும் என்று தோன்றுகிறதல்லவா? இவைகள் எப்படியெல்லாம் பயன்படுகின்றன, பாருங்கள்.

பட்டுப் பைகளில் காற்றடைத்த ஆகாயக் கப்பல்களுக்கு ஏர்ஷிப், டிரிஜிபிள், ஸெப்பெலின் என்றெல்லாம் பெயர். இவற்றின் பட்டுப் பைகளில் ஒரு காலத்தில் ஹைடிரஜன் வாயுவை அடைத்து வந்தார்கள். ஹைடிரஜன் வாயு காற்றைவிட இலேசானது. ஆதலால் அது தன்னை அடைந்த ஆகாயக் கப்பலைத் தூக்கிச் சென்றது. ஆனால், ஹைடிரஜன் எளிதில் நெருப்புப்பற்றக் கூடியது. ஆகையால், மின்னலாலும் வேறு தீப்பொறிகளாலும் நெருப்பு விபத்து அடிக்கடி நேர்ந்தது. பின்னர், ஹைடிரஜனுக்குப் பதிலாக ஹீலியத்தை உபயோகித்தார்கள். அது தீப் பற்றாத இயல்புள்ளதாதலால் நெருப்பு விபத்து இல்லாமற் போய் விட்டது.

ஆர்கன் வாயுவை மின்சார விளக்குக் குமிழ்களில் சிறிது புக விட்டிருந்தால் குறைவான மின்சார ஓட்டத்தில் மிகுதியான ஒளி கிடைக்கிறது. மின்சாரக் கம்பியிழையில் அதிகச் சூடு ஏறியபோதும் அந்த இழை விண்டுபோகாமல் குமிழிக்குள்ளிருக்கும் ஆர்கன் அதைக் காப்பாற்றி வந்தது. இவ்வகை விளக்குக்கு அரை-வாட்டு-விளக்கு என்று பெயர். ஆர்கனோடு பாதரச ஆவியைப் புகுத்திய மின்சாரக் குழாய் விளக்குகள் நீல நிறமாக ஒளிவீசுகின்றன.

நீயான் வாயு புகுத்திய குழாய் விளக்குகள் சிவந்த ஆரஞ்சு நிறமாக ஒளிவீசுகின்றன. இவ்வகையான விளக்குகளைக் கடைகளிலும், சினிமாக் கொட்டகைகளிலும் பார்த்திருப்பீர்கள். நீயானோடு சிறிது ஹீலியத்தையும் புகுத்தினால் பொன்னிறமான ஒளி வீசும். டெலிவிஷன் என்னும் ஒளிபரப்பிலும் நீயான் வாயு துணைபுரிகிறது.

நோய்க்கிருமிகளை அழிப்பதற்கும், புகையில்லா சமையல் முதலியவற்றின் துர்நாற்றங்களை நீக்குவதற்கும், மூடுபனியை ஊடுருவி அப்பாலுள்ளவற்றைக் காண்பதற்கும், உலோகங்களைத் தறையிடுவதற்கும், பிரித்தெடுப்பதற்கும், இவை பயன்பட்டு, நமது வாழ்க்கை மேலான முறையில் நடக்கத் துணைபுரிகின்றன.

இவைகளைச் சோம்பேறிகள் என்று சொல்வது நீதியாகுமா?

உ

நாலடியார்—திருத்தவுரை

திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்.

[முன்தொகுதியில் ௨௨௮-ஆம் பக்கத்தொடர்ச்சி]

அதிகாரம்—செல்வ நிலையாமை. பாட்டு—1.

44 *அறுசுவை யுண்டி அமர்ந்தில்லா ளூட்ட*
மறுசிகை நீக்கியுண் டாரும் —வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனின் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

இ—ள்:—அறுவகையாயுள்ள சுவைகளோடுங் கூடிய உணவுகளை, இல்லாள் உடனிருந்து (கணவனுண்ணும் வகையறிந்து) உண்பிக்க, அவற்றில் (பலகாலுண்ட அலுப்பால் உபகரணங்களிலும் சிற்றுண்டி வகையிலும் பானவகையிலும் மனம் மறுத்ததனை நீக்கி உவந்ததனையுண்டு மகிழ்ந்த பெருஞ்செல்வரும் (அந்நிலை மாறி ஏழைகளாய்ப்) பிறிதோரிடத்திற் சென்று கூழுக்கிரப்பார்கள். அவ்வாறாயின், செல்வமென்று சொல்லப்படுகிறதொன்று நிலையுடையதாகக் கருதப்படுந் தன்மை யுடையதன்று. எ - று.

உம்மை - சிறப்புணர்த்துவது. மறுத்ததனை நீக்கி என்றதன் அருத்தாபத்தியால் உவந்ததனையுண்டு என்பது கிட்டிற்று. மறுசிகை—சிகை-முடித்தகுடுமி; அது விரல்மடங்கிப் பிடித்த பிடியளவான உணவிற்கு உவமையாகுபெயராய், எதன்கண் மனமறுத்த சிகைகளுமுண்டு, அது மறுசிகை; என வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. மனம் மறுத்ததனை நீக்கி உவந்ததனை உண்ணும்படியுள்ளநிலை பெருஞ்செல்வர்க்கே உள்ளதாவது. அதனால், மறுசிகை நீக்கியுண்டாரு மென்பது பெருஞ் செல்வரை உணர்த்திற்று., கூழிரப்பர் - நான்கன்தொகை. அறுசுவை:— தித்திப்பு, உவர்ப்பு, புளிப்பு, கைப்பு, எரிப்பு, துவர்ப்பு. கூழ்-புல்லரிசி யுணவு. கெகிழ்ந்ததனைக் கூழ் என்றும், கட்டியாக உள்ள

தனைக் களி என்றும் கூறுவர். அவ்வுணவே பண்டு செல்வர்வீடு களில், இரவலர்க்கும் அடிமைகட்குங் கொடுக்கப்படுவது. உள்ளுரி விரக்க ஙானுந்தலால் சென்றிரப்பர் ஓரிடத்தென்றார்.

உண்டாக-உள்ளதாக, நிலையுடையதாக. உள்ளபொருள்-நிலையுடைய பொருள். ஈண்டு, உண்டென்பது குறிப்புவினையாலணையும் பொருளுணர்த்திற்று.

அதிகாரம்—யாக்கை நிலையாமை. பாட்டு—25.

45 கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும்—மணங்கொண்டீண்
டுண்டுண்டுண் டென்னு முணர்வினாற் சாற்றுமே
டொண் டொண்டொண் ணென்னும் பறை.

இ—ள்:—உறவினர் நண்பர் பணியாளர்களான சுற்றத்தார் கூட்டமாய்க் கல்லென்று ஓசையுண்டாக அலறியழப் பிணமாகி (அலங்கோலப்பட்டுச்) சுடுகாட்டிற் செலுத்தப்படுவார் பலரைப் பார்த்திருந்தும், இங்கே கலியாணஞ் செய்துகொண்டால், எனக்குப் பெண்டாட்டி உண்டு, மக்களுண்டு, அவர்களாற் சுகமுண்டு என்று நினைக்கும் நினைப்புடையவனுக்குக் கலியாணத்தில் தாலி கட்டுகையிற் சேரக்கொட்டப்படும் மணப்பறைகள், டொண் டொண் டொண் என்னும் அடுக்கொலியால், மகிழ்ச்சி கொள்ள வேண்டா, அகப்பட்டுக்கொண்டாய்; மாட்டிக்கொண்டாய் என்று புத்தி கற்பிக்கும். எ-று.

உய்ப்பார்-செயப்பாட்டு வினையாலணையும் பெயராய்நின்றது; உய்க்கப்படுவார் என்பது பொருள். பிணத்தைக்கண்டும் என்பதை விட்டுப், பிணத்தைக் கொண்டுசெல்வாரைக் கண்டு மென்பதா லுள்ள விசேடம் யாது? நம்மைப்போல இருந்தான் பிணமாகிப் போய்விட்டான் என்ற நிலையாமையுணர்ச்சி இறந்தவனைக்கொண் டே உண்டாவதனால், அது சரியன்று. 'பிணம் சுமப்பாரென்று ஓரினத்தாருண்டென்று' ஒரு பெரியவர் கூறினர். "செத்தாரைச் சாவார் சுமந்து" என வருதலால் அது பொருந்தாது.

அமைதி தருந் துறவுநெறியி லொழுக வொட்டாமற் செய்வது பெண்ணாசையாகையால், கல்யாணஞ்செய்தல் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதொக்கும்; என்றெண்ணுகிற துறவி ஒருவர் இவ்வாறு கூறினர். அவர் "யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" (திருமந்திரம்) என்று கருதுபவர்.

பிறரெல்லாம் சாப்பறை எனக் கொண்டு உரைகூறினர். அது சரியன்று; 'வெடிபட ஆர்ப்பது கேட்டும் அதுதெளியான்' என்பர் பின்னும் ஆதலின். கண்டும் என்பதோடு சாவு விஷயம் முடிந்தது. பிறகு சொல்லப்படும் பறை வேறு.

அதிகாரம்—நல்வினஞ்சேர்தல். பாட்டு—173.

46 அடைந்தார்ப் பிரிவும் அரும்பிணியுங் கேடும்
உடங்குடம்பு கொண்டார்க் குறலால்—தொடங்கிப்
பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை
உறப்புணர்க அம்மா வென் னெஞ்சு.

இ—ள்:— இளவயதில், தம்மாலடையப் பட்டவரான தாய்தந்தையரையும் பிறகு தம்மையடைந்தவரான மனைவிமக்களையும் (அவர் சாவினால்) பிரிய நேருதலும், மருந்துகளால் தீராதநோய்களும், தம் சொத்துக்களாயுள்ள பல பொருள்களுக்கும் அவ்வப்பொழுது அழிவு நேர்தலும் ஆகிய பல துன்பங்களும் உடம்புகொண்டார்க்குப் பிறந்தநாள் தொடங்கி வருதலால், அத்தகைய பிறப்பு துன்பமயமானது என்றுணர்ந்து, அது இனி உண்டாகாமைக்குரிய நெறியிலொழுகுகின்ற நல்லறிஞரது கொள்கையை என் மனம் நன்றாக ஏற்றுக்கொண்டு நடக்கட்டும். எ - று.

பிரிவு-சாவினாற் பிரிவு. இரட்டுறமொழிதல் என்ற நியாயத்தால் அடைந்தார்ப் பிரிவு என்பதற்குச் செயப்பாட்டுவினைப் பொருளும் கொள்ளப்பட்டது. நெஞ்சு உறப்புணர்க என்றதனால், பேரறி

வினர் என்பதற்கு அவர் சொன்கையெனப் பொருள் கொள்ளப் பட்டது. உடன்குளன்பது கூடஎன்ற பொருளில் நிற்பது. அடைந் தார்ப்பிரிவு என்பதற்கு 'பந்துக்கள் சிநேகிதர்களை நீங்குதலு' மென்றனர் பிறர். பிறப்பு இன்னாது என்றுணர்தற்கு அதுபோது மான காரணமாகாமை உணர்க. தொடங்கி என்பதற்கு நூல்களை யாராயத் தொடங்கி என்றனர். பிறப்பு இன்னாது என்றுணர்தற் குக் கண்கூடான காரணங்கள் கூறப்பட்டிருக்க, அவற்றை விட்டு நூலாராயத் தொடங்கி என்றதற்குப் பயன் யாதுமில்லை.

பொருள்—பசுக்கள், ஆடு, விளைநிலங்கள், அவற்றின் வரு வாய், அடிமைகள் முதலியன. தாய் தந்தையரை யிழத்தல்—தம் மைப் பாதுகாப்போரை இழத்தல்.

அதிகாரம்—நல்லினஞ்சேர்தல். பாட்டு—174.

47 இறப்ப நினையுங்கா லின்னா தெனினும்
பிறப்பினை யாரும் முனியார்— பிறப்பினுள்
பண்பாற்றும் நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின்.

இ—ள்:—(பிறந்தவரின் வாழ்வின் கிடப்பினை) ஆராய்கையில், வாழ்நாளில் பிறருடைய சங்கடங்களையறிந்து வேண்டுவனசெய்யும் நன்மனமுடையாருடன் எப்பொழுதும் நண்பராயிருந்து (அவரும் தம்மிடம்) நட்புக்கொள்ளும்படி கிட்டுமாயின், (பிறகாரணங்களால்) பிறப்பு மிகத்துன்பமாவதென்றாலும், இக்காரணத்தால், அதனை யாரும் வெறுக்கமாட்டார். எ - று.

பிறப்பு இறப்ப இன்னாது ஆவது - அடைந்தார்ப்பிரிவும், அரும்பிணியும், பொருளழிவும், முதலியவற்றால் ஏற்படுவது. பண்பு ஆற்றுதல் ஆவது- 'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்' என்றாராதலின், பிறருடைய கஷ்டநஷ்டங்களையறிந்து வேண்டுவன செய்தல். அங்ஙனம் பண்பாற்றுவாரது நட்புக் கிட்டுதல் அரிதாக

வின், நட்கப்பெறின் என்றார். நண்பாற்றி நட்கப்பெறின் என்பதற்கு, 'சிநேகத்தைச் செய்து அவர்களோடு கூடிவாழப்பெற்றால், நட்க-கூடிவாழ' என்றனர்பிறர். கூடிவாழ்தல் நண்பாற்றுதலினின்று வேறாகாமையால், அஃது உரையன்மையறிக. எனினும் - தெரினிலை. இதனால் இருவர்மனமு மொத்துவாழ்கின்ற நட்பினருமை கூறப்பட்டது.

அதிகாரம்—நட்பாராய்தல். பாட்டு—213.

48 யானை அனையவர் நண்பொரீஇ நாய்அனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

இ—ள்:—யானை, (பெருமதிப்புடையதாயினும், செய்ந்நன்றி மறப்பது; அதனால்,) அதுபோன்றவரோடு சிநேகஞ்செய்வதனின்றும் நீங்கி, நாய் (இழிந்தபிராணியாயினும் செய்ந்நன்றி மறவாமையின்) அது போன்றவரது சிநேகத்தை விரும்பிக்கொள்ளுதல் வேண்டும். யானையோவெனின்? (பாகன்செய்தவுபகாரங்களை) அடிக்கடி அறிந்திருந்தும், அவனையே கொல்லும். நாயோவெனின்? (தன்னை வளர்ப்பவன்) எறிந்தவேலாயுதம் தன்னுடம்பில் தைப்புண்டிருக்கவும் சினங்கொள்ளாமல், அவன்செய்த வுபகாரங்களை நினைந்து, தன் அன்புதோன்ற வாலை ஆட்டும். எ - று.

பாகனையே என்பதில் ஏகாரம் சிறப்பும்மைப்பொருள் உணர்த்திற்று. அது பாகனையும் கொல்லும். மற்றவரை விடுமா? எனினுமாம். பாகனையே கொல்லும் - பாகனையே குற்றங்கண்டு கொல்லும் எனப் பெரும்பிழைபட, இளவழகனார் கூறினார். அறிந்தறிந்தும் - பலநாள் பழகியிருந்தும் என உரைகாரர் பலருங் கூறினர். இவ்வாறு பிழைகள் பல.

இனி, அறிந்தறிந்தே பாகனையும் கொல்லும் எனினும் பொருந்தும். அறிதலுக்குச் செயப்படுபொருள், அவன் கொடுக்கும் கவளமாகிய உபகாரம்.

அதிகாரம்—காமநுதலியல். பாட்டு—400.

49 கண்மூன் றுடையானுங் காக்கையும் பையரவும்
என்னீன்ற யாயும் இழைத்ததென்—பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனூர் சென்ற நெறி.

இ—ள்:—மூன்று கண்களுடைய சிவபெருமானும் காக்கையும் படமுடைய பாம்பாகிய ராகுவும் என்னைப்பெற்ற தாயும் எனக்குச் செய்த பிழை யாது? ஒன்றுமில்லை. அணங்கவிழ்ந்த கோங்கரும்பு போன்ற நகிலுடைய தோழீ! பொருள்தேடுதல் நிமித்தம் என் துணைவர் சென்றநெறியே எனக்குப் பிழைசெய்தது. எ-று.

கணவன்பிரிவால் வருந்துகிற தலைவி தோழியை நோக்கிச் சொல்கிறாள், தோழீ! நீசொல்வதுபோல நான் படும் இத்துன்பங்களுக்கு, தன்னாற் கொல்லப்பட்ட மன்மதனை மீள உயிர்ப்பித்த சிவபெருமானும், தன்னாற் பொரிப்பிக்கப்பட்ட குயிற்குஞ்சுகளைக் கொல்லாது விட்ட காக்கையும், தன்னால் விழுங்கப்பட்ட சந்திரனை மீண்டும் வெளியே விட்ட ராகுவும், (வேங்கைபோல் என்னை அதட்டுகின்ற) என் தாயும் காரணமாகுபவ ரல்லர்; என்னிடத்து இணைபிரியா நட்பினராயிருந்த தலைவர் இப்பொழுது பொருளிடத்து நட்புடையராய்ச் சென்ற செலவே (அதாவது பொருள்வயிற் பிரிவே) எனக்குப் பிழைசெய்தது: என்றாள். "செல்லாரு மல்லர் சிறுநெறி"-303. என இரத்தல் தொழிலைச் சிறு நெறி என்றாற்போல ஈண்டுச் சென்றசெலவினைச் சென்றநெறி என்றார்; மற்றைப் பொருளும் தோன்ற. பிறர் - சென்றநெறியையே வெறுக்கவேண்டு மென்றனர். தனக்கினியளாய்த் தன்னைப்போல வருந்துதலின், தோழியை மெச்சுபவளாய்ப் பொன்னீன்ற கோங்கரும்பன்ன முலையா யென்றாள்.

[தொடரும்]

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1953-ஆம் ௵ மார்ச்சு ௴ 7௳ நடத்திய

ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

[எண்கள் ரிஜிஸ்டர் நம்பரைக் குறிப்பன.]

I. பி. ஏ. பரீக்ஷை.

1-வது வகுப்பு.

S. கணேசபாண்டியன், Thiagarajar College, Mathurai'
(முதற்பரிசு ரூபா 50)

2-வது வகுப்பு.

Holy Cross College, Trichinopoly:—3

II. இண்டர்மீடியேட் பரீக்ஷை.

1-வது வகுப்பு.

A. ராஜேஸ்வரி, Holy Cross College, Teppakulam, Trichinopoly. (முதற்பரிசு ரூபா 40.)

2-வது வகுப்பு.

Madura College, Mathurai:—5.

Holy Cross, College, Teppakulam, Trichinopoly:—7, 9, 10, 11, 12.

Vivekananda College, Mylapore, Madras:—13, 14.

St. Josoph's College, Trichinopoly:— 812, 813, 816. 818, 819, 820, 825, 827 to 830, 832, 833, 838.

III. ஸ்கூல்பைனல் பரீக்ஷை.

1-வது வகுப்பு.

தொடர் எண்.	ரிஜிஸ்டர் எண்.	
1	451	M. K. ரேணுகோபால், Kellet High School, Triplicane, Madras. (முதற்பரிசு ரூபா 30.)
2	741	V. M. குருசாமி, S. S. Board High School, Rajapalayam. (இரண்டாவது பரிசு ரூபா 25.)

3 73 P. R. சோமசுந்தரம், Madura College High School, Mathnrai. (மூன்றாவது பரிசு ரூபா 20.)

786 V. நமசிவாயர், George High School, Vishnupuram, Tanjore Dt. (நான்காவது பரிசு ரூபா 15.)

533 P. K. வேணுகோபாலன், Municipal High School, Tiruvannamalai. (ஐந்தாவது பரிசு ரூபா 12.)

Setupati High School, Madurai:—
2nd Class—18. 19, 20, 22, 24, 25, 27, 32 to 35, 38, 39, 43 to 45, 48, 50 to 57, 65, 66, 68, 70.

Madura College High School, Madurai:—
2nd Class—71, 77 to 79, 81 to 84, 86 to 89.

Sourashtra Girls' High School, Madurai:—
1st Class—96,
2nd Class—90 to 95, 97 to 103.

St. Joseph's Girls' High School, Madurai:—
2nd Class—104.

Rajah's High School, Ramnad:—
2nd Class—106, 109, 111 to 113, 115, 116, 119, 121, 122, 124 to 126, 128, 129, 134 to 136, 138 to 146, 148 to 153,. 155 to 163, 165 to 180, 182, 187, 194, 199, 204 to 206, 209, 210, 212, 217, 220, 221.

E. R. High School, Teppakulam, Trichinopoly:—
1st Class—231, 232, 264, 275.
2nd Class—224 to 230, 233 to 238, 240 to 248, 251 to 263, 265 to 272, 274, 276, 277, 280.

Board High School, Ariyalur:—
2nd Class—283, 284. 288. 290, 292, 293.

Little Flower High School, Salem:—
2nd Class—294 to 305, 307 to 309, 315 to 317, 320 to 322.

Gokulnath Hindu Mahajana High School, Salem:—
2nd Class 324 to 329.

Ranee's Govt. High School for Girls Pudukottai:—
1st Class—335.
2nd Class—330 to 334, 336, 339 to 343, 345, 346 to 348,

Voorhee's College High School, Vellore:—
1st Class—364.
2nd Class—349 to 356, 358 to 363, 365, 366, 367, 369, 372, 373, 375, 376, 378.

Municipal High School, Vellore:—
1st Class—384, 389.
2nd Class—379 to 383, 385 to 388, 390 to 398, 401 to 404, 406, 407.

Board High School, Pakala. N. A. Dt.:—
2n Class—408, 411.

St. Ebba's Girls' High School, Mylapore, Madras:—
1st Class—417.
2nd Class—413 to 416, 418 to 425, 427, 428, 430 to 433.

Sri. R K. M. Sarada Vidyalaya Girls' High School, Thyagarayanagar, Madras:—
1st Class—434.
2nd Class—436, 437, 439.

Kellet High School, Triplicane, Madras:—
1st Class—456.
2nd Class—440, 441, 443 to 447, 449, 453, 454, 455, 457.

Madras Chiristian College School, Chetput, Madras:—
2nd Class—468, 476, 478, 481, 485 to 489.

Sri Ramakrishna Mission High School, (North Branch) Buzlulla Road, T, Nagar, Madras:—
2nd Class—500 to 503, 505, 506.

Pachaiyappa's High School, Conjeevaram:—
2nd Class-507 to 510, 511 to 513, 515 to 518, 520, 522 to 526.

Board High School, Papanasam;—
2nd Class—527, 528, 529.

Municipal High School, Thiruvannamalai:—
2nd Class—530 to 532, 534 to 537, 539 to 543.

Hindu Nadar Victoria High School, Sivakasi:—
2nd Class—544 to 554, 556 to 559, 561 to 564, 566 to 569.

S. R. Board High School, Nanguneri:—
2nd Class—570 to 581, 859.

Hindu High School, Ambur. (N. A. Dt.):—
2nd Class—582 to 587.

Muzharul Uloom High School, Ambur. (N. A. Dt.):—
2nd Class—591, 592.

St. John's High School, Palayamkottai:—
1st Class—605.
2nd Class—593 to 600, 602 to 604, 606 to 615, 617 to 622.

Board High School, Kamuthi:—
2nd Class 623 to 631, 633 to 638.

Rajah Setupati Govt. High School, Paramakudi:—
1st Class—693.
2nd Class—639 to 664, 666 to 673, 675 to 684, 686 to 690, 692, 694 to 696.

Board High School, Polur; (N. A. Dt.)—
2nd Class—697 to 707.

Town High School, Arni. (N. A. Dt.):—
1st Class—708.
2nd Class—709 to 718.

Board High School, Arni. (N. A. Dt.):—
2nd Class—719, 721, 724.

Hindu High School, Vaniyambady:—
2nd Class—725 to 732, 735.

S. S. Board High School, Rajapalayam:—
1st Class—740.
2nd Class—736 to 739, 742, 745 to 762, 764, 766 to 772.

George High School, Vishnupuram. (Tanjore Dt.):—
1st Class—776, 782.
2nd Class—773 to 775, 777 to 779, 781, 783 to 785, 787 to 789

Board High School, Cheyyar, at Tiruvettipuram. (N. A. Dt.):—
1st Class—791.
2nd Class—790, 792 to 805, 807, 808.

P. K. N. High School, Tirumangalam:—
2nd Class—844 to 856.

மதுரைத் தமிழ்ச்சங்கம், 13—6—1953.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி.